# தொண்டன்

ஆரம்பம் - 1969 - பெப்ரவரி

எத்தனை தடைகள் வந்தாலும் வழியில்
எமது பயணம் தொடரும் நடுவில்
தங்குமடங்கள் எம் தலை விதியை
மங்காது செய்ய மனத்திடங் கொள்வோம்

ஜூன் - 2005

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூன் - 2005

மலர்-37 இதழ்-04

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/ மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு... | - | 01 |
| அனேகர் தனிமைச்சிறையில் | - | 02 |
| நினைவுகள் | - | 03 |
| உறவை ஆழப்படுத்தும்... | - | 04 |
| இலக்கிய மஞ்சரி | - | 05 |
| தொலைக்காட்சி... | - | 06 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 09 |
| மனக்கோலம் | - | 10 |
| சுனாமி தந்த கை | - | 13 |
| மாணவர் பக்கம் | - | 15 |
| தமிழ் ஒலிபரப்பில் | - | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 18 |
| திருத்தந்தை... | - | 20 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| அறிவை வளர்ப்போம் | - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....



சமாதானம் சாத்தியப்படுமா...
அமைதி அனுபவிக்கப்படுமா...
சாந்தி சந்திக்கப்படுமா...
உள்ளங்களின் உள்ளரங்க
ஏக்கங்கள் இவை...
இதயத்தின் இடைவிடாத
தேடல்கள் இவை...

இதயங்கள் இதமாக இருந்தால்
மனங்கள் பக்குவமாக இருந்தால்
உள்ளங்கள் உறுதியாக இருந்தால்
சாந்தி, சமாதானம் ஒன்றும்
எட்டாக் கனியுமல்ல
எட்டமுடியாத எல்லையுமல்ல

இலங்கைத் தலைவியின் உள்ளத்தில்
உறுதி உயிர்ப்பு உதயமாவது
போல் தெரிகிறது
ஆயினும்
கூட இருக்கும் இனவாதிகள்
உயிர்ப்பை அஸ்தமனமாக்கப்
பார்க்கிறார்கள்

இறைவன் பெயரைச் சொல்லி
இனவாதமா...
கடவுள் நாமத்தை உச்சரித்து
கசப்புணர்வா...
சமயத்தை வைத்து -
சகோதர உறவுக்கு
சாவுமணியா...

சமாதானக் குட்டையை
குழப்புவோரும் உண்டு
அதில் சுயலாபம் தேடி
மீன்பிடித்துப் போவோரும் உண்டு
இறை சக்தி இறங்கி வந்தாலன்றி
இனிய சமாதானம் இடம் பெறாது
திருச்சபை அழைக்கிறது
சாந்திக்காக சத்திய தேவனை வேண்டும்படி
ஒவ்வொரு உள்ளத்திலும், இல்லத்திலும்
இறைவனை நோக்கிக் குரல் எழும்பட்டும்
இறை சக்தி வேண்டி குரல் ஒலிக்கட்டும்

-ஆசிரியர்-



## இறைவாக்கு

**அமைதி ஏற்படுத்துவோர்**
**பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள்**
**கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்**

மத். 5/9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநேகர் தனிமைச் சிறையில்...

**தனிமையுணர்வு** :- இன்றைய சமூதாயத்தில் அனேகரை இது பீடிக்கிறது. வயது, இனம், அந்தஸ்து, மதம் என்ற எந்தப் பாகுபாடுமின்றி எல்லோரையுமே இது தொற்றுகிறது. நீங்கள் எப்போதாவது தனிமையில் வாடியிருக்கிறீர்களா? சொல்லப்போனால், நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சமயத்தில் தோழமைக்காக ஏங்கியிருக்கிறோம். நாம் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கிற ஒருவர், நமக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லி நம்மைத் தெம்பூட்டுகிற ஒருவர், நம்மைப் புரிந்து பேசுகிற ஒருவர் நம்மை ஓர் ஆளாக மதிக்கிற ஒருவர் நமக்குத் தேவை என உணர்ந்து இருக்கிறோம்

தனிமரமாக இருந்தாலே நாம் தனிமையில் தவிக்கின்றோம் என்று அர்த்தமில்லை. ஒருவர் தனிக்கட்டையாக பலகாலம் வாழலாம்; தன்னந் தனியாக விடப்பட்டது போன்ற உணர்வே இல்லாமல் திருப்தியுடன் எல்லாக் காரியங் களையும் செய்யலாம். மறுபக்கத்தில் தனி மரமாக இருப்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சிலர் இருக்கிறார்கள்

தனிமையுணர்வு என்பது சக்திவாய்ந்த ஓர் உணர்வாகும். அது வேதனை மிக்கதாகவும் இருக்கலாம். இது நம்மை வெறுமையாக உணர வைக்கிறது. மற்றவர் களிடம் ஒட்டுறவே இல்லாமல் ஒதுக்கப்பட்டது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது. அச்சமயத்தில் நாம் நிலை குலைந்து போய்விடலாம். எழுத்தாளர் ஜூடித் வியார்ஸ்ட் இவ்வாறு சொல்கிறார்: "தனிமை என்பது இதயத்தில் பாரமாக அழுத்தும் கல்லைப்போல் கிடக்கிறது. தனிமை நம்மை வெறுமையாகவும் நம்பிக்கையற்றவர்களாகவும் விட்டுச் செல்கிறது. தனிமை நம்மைத் தாயில்லாப் பிள்ளைபோல, வழி தப்பிச் சென்ற ஆட்டைப்போல இந்தப் பிரமாண்டமான உலகில், அக்கறையற்ற உலகில், அவ்வளவு சிறுமையானவர்களாகவும் கைவிடப்பட்டவர்களாகவும் உணரச்செய்கிறது" என்கிறார்.

பிரச்சினைகளும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் மக்களின் மீது பலதரப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. ஒருவேளை நம் தோற்றம், குலம் அல்லது மதம் காரணமாக சகாக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டதைப்போல் நாம் உணரலாம். சூழ் நிலையில் ஏற்படும் மாற்றங்களும் தனிமையுணர்வை ஏற்படுத்தலாம். நம்முடைய பழைய நண்பர்களை விட்டுப்பிரிய நேருவதால் தனிமையுணர்வு ஏற்படலாம். ஒரு வேளை இது பல ஆண்டுகளுக்குத் தொடரலாம். அதுமட்டுமல்ல நாம் வயதாகி வருகையில் நம் நண்பர்களும், நமக்குப் பழக்கமானவர்களும் மாறலாம் குறையலாம் அல்லது இல்லாமலும் போகலாம்.

மணம் செய்து கொள்வது தனிமையுணர் விலிருந்து விடுதலையளிக்கும் என்று எப்போதுமே உறுதியாகச் சொல்ல முடியாது. ஒருவருக்கொருவர் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையோ ஒத்துப் போகாத நிலையோ டென்ஷனை ஏற்படுத்தலாம். அதனால் பிரிவுகள் ஏற்படலாம். மனிதனானவனின் அடிமனம் எப்போது அதிகமாகக் காயப்படுகிறது என்பதை அறிவீர்களா? தன்னை மற்றவர் இகழும் போதோ, கசப்பான வார்த்தைகளைக் கூறும்போதோ கூட இல்லை. மற்றவர் தன்னை ஒரு பொருட்டாக மதிக்காதபோதுதான் மனிதனின் மனதில் காயம் ஆழமாகப் படுகிறது. ஆக அலட்சியமாக இருப்பதுதான் ஒருவர் இன்னொருவருக்குச் செய்யும் மாபெரும் அவமானம். இவ்வாறான அவமானங்களின் போது தனிமையை மனிதன் பெரிதும் உணருகிறான். இவை தவிர, மற்றொரு விதமான தனிமையுணர்வும் உள்ளது. அது நம்மைப் பெருமளவு பாதிக்கலாம். அதாவது நமக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள உறவு பாதிக்கப்பட்டு அவரிடமிருந்து விலகிச் சென்றுவிட்டதை உணரும் போதே இவ்விதமான தனிமையுணர்வு ஏற்படுகிறது. எனவே நாம் இந்தக் கால கட்டத்தில் இறைவனோடு உறவு கொண்டு அவரோடு இணைந்து வாழ்ந்து தனிமையுணர்விலிருந்து மீண்டு வாழுவோம். ஒருவர் ஒருவரை வெறுக்காது, புரிந்து வாழப் பழகுவோம். பொய், பித்தலாட்டம், சாக்குப் போக்குகளைத் தவிர்த்து மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு, இறைவனில் ஒன்றித்து இன மத பேதமின்றி, நம் உயிரை எவரும் பிரிக்காமலும், பிறர் உயிரை நாம் எடுக்காமலும், தனிமையில் வாடும் உள்ளங்களை நினைத்து இறைவனிடம் வேண்டி இனிதே வாழ முயற்சிப்போம்




*ரீமா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்



சுனாமியாய் ஆர்ப்பரித்து ஓய்ந்தது
கடலலை

அழிவின் அவலங்களைத்தாங்காத
மக்களிடம்
கடற்கரையே
ஒரு கனத்தையென்றது அரசு.

கடலின் தூரத்தை
நீட்டிக் கொண்டால் தான்
வாழ வழியுண்டு

ஆழிப் பேரலை அனர்த்தத்தின்
முன்னான வாழ்க்கை பற்றி
அகதி முகாம்கள்
அழுது கொண்டன.

கடற்கரை சுகம் கூறும்
கவிதைகள் யாவும்
காணமல் போனது
இலக்கியத்திலிருந்து.

அண்டையுள்ள தீவுகளில்
அடிக்கடி ஆழியலை
கிளம்புவதாய்
ஊடகங்கள் உரைத்தன

உடல்களில் பலமுமில்லை
உள்ளங்களில் தெம்புமில்லை
பொய் வதந்திகளைப்
பரப்பாதீர்கள் என்று
பொது மக்கள் கூவினர்

நிவாரண நிகழ்வுகள்
கூடார வாழ்க்கை
அவர்கள் அடிவயிற்றில்
அனலை மூட்டிற்று

முணுமுணுப்புக்கள்
மூச்சுக் காற்றாகி
உச்சி வெயிலிலே
வீதி மறியலும் நடந்து முடிந்தது

மற்றுமொருநாள் நள்ளிரவு
தொல்லைக் காட்சிகள் கதறின
எட்டுத்தசம் ஏழாய்
மீண்டுமொரு பூகம்பம்
பாதுகாப்பைத் தேடுங்கள்

ஆண்டவன் சிரித்தான்
அன்பனே
இப்பொழுது கூட
என்னை மறந்து விட்டாயே.

கவிஞர்
**பைந்தமிழ்க்குமரன் தாவீது**
பாண்டிருப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறவை ஆழப்படுத்தவும் நல்லெண்ணத்தை வளர்க்கவும் வெசாக் வழிவகுக்கின்றது

## –வத்திக்கான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி–

அருகருகே வாழும் பௌத்தர்களையும், கிறீஸ்தவர்களையும் உள்ளடக்கிய நாடுகளில் நடைபெற்று வரும் உரையாடலுடன் இணைந்த உறவு வாழ்வானது அவரவர் தத்தம் நம்பிக்கைகளுக்குச் சான்று பகரவும், ஒருவர், ஒருவருடைய மதத்தை ஆழமாய்ப் புரிந்து கொள்ளவும், நல்ல மனதைக் கட்டியெழுப்பவும், நல்ல அயலவர்க்குரிய மனப்பான்மையுடன் வாழவும் வழிவகுக்கின்றது. இவ்வாறு இவ்வாண்டு இடம்பெற்ற வெசாக் விழாவினையிட்டு வத்திக்கானின் பிறமத உரையாடலுக்கான திருத்தந்தையின் சபை வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அச்செய்தியில் கத்தோலிக்கர்களும், பௌத்தர்களும் ஒருமித்து வாழ்ந்துகொண்டிருக்கும் இடங்களில் அவர்கள் இவ்விழாவினூடாக தங்களுக்குள் அமைந்துள்ள உறவுகளை இன்னும் ஆழப்படுத்துவார்கள் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, சுனாமியினாலும், பூமி அதிர்ச்சியினாலும் பாதிக்கப்பட்ட தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் பிறமதத்தினர் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் முயற்சிகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற தேவை உணரப்பட்டது. முன்னொரு காலத்திலும் இல்லாதபடி இந்த அறிவானது மன்றாட்டுக்களையும் இரக்கத்தின் செயல்களையும், தயாள குணங்களையும் ஏற்படுத்தியுள்ளது. பௌத்தர்களும், கத்தோலிக்கர்களும் பாதிக்கப்பட்டவர்களின் துயர் துடைக்க கையோடு கைகோர்த்துப் பணியாற்றினார்கள். சமய நிறுவனங்கள் தற்காலிக தேவைகளைப் பூர்த்தி செய்யவும் எதிர்காலத் தேவைகளைக் கண்டறியவும் ஒத்துழைத்தன. மீள் கட்டமைப்புக்கான நீண்ட காலத் திட்டங்கள் மதவேற்றுமைகளைக் கடந்த ஒரே மனப்பான்மையுடன் தொடர்ந்து செயலாற்ற எம்மை அழைக்கின்றது. இதே போன்று வெவ்வேறு சூழ்நிலைகளில் ஏற்படும் தேவைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து நல்ல மனங்கொண்ட மக்கள் ஒன்றாகச் செயற்படும் தேவைகள் ஏற்படுகின்றன. இப்படியாக ஒன்றித்துச் செயற்படும் பொழுது அவை மனித மாண்பையும், மனித உரிமைகளை மதிக்கின்ற தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றன.

இம்முறை வெசாக் தினத்தைக் கொண்டாடும் வேளையில் பல குடும்பங்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களை இழந்த நிலையில் வெசாக்கைக் கொண்டாடுகிறார்கள். அத்துயருறும் மக்களின் இழந்துபோன அன்புள்ளங்களை நாம் மறக்கமாட்டோம். அவர்களை எம் செபத்தில் நினைவு கூருவோம். இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

**ஆழியோன்**

## தமிழர் உற்பத்தி

அண்மையில் புளியடிக்குடா மேயர் மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு இடம்பெற்றது. இக்கருத்தரங்கை தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த அருட்பணி. அமல்ராஜ் அடிகளார், பேராசிரியர் தெய்வநாயகம் ஆகியோர் நடாத்திவைத்தனர். இக்கருத்தரங்கு விவிலியச் சரித்திரம் தொடர்பாக நடத்தப்பட்டது.

எமது ஆதிப்பெற்றோர் ஏதேன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டபின் அவர்கள் காலடி எடுத்துவைத்த இடம் இலங்கைதான் என்று பேராசிரியர் தெய்வநாயகம் கூறினார். எனவேதான் ஆதாமின் மலை (சிவனொளிபாத மலை) என்ற ஒன்று காணப்படுகின்றது என்று அவர் ஆதாரம் கூறுகின்றார்.

முதல் மனிதன் ஆசியாவில் வாழ்ந்தமைக் கான தடயங்கள் அதிகம் உண்டு. ஆதாம் ஏவாளின் பிள்ளைகளின் உயரம் சுமார் நாற்பது அடிகள் இருக்குமென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அவர்களின் பாத அளவுகள் ஆதாமின் மலையில் உள்ள பாத அளவுகளுக்கு சமன் என்றும் பேராசிரியர் கூறினார்.

இதற்கிடையில் தமிழர் பழம் சரித்திரம் என்னும் நூலில் 'தமிழர் உற்பத்தி' என்னும் தலைப்பில் சில விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நூலை கந்தையாப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் அணிந்துரையை எழுதியுள்ளார்கள். முதலாம் பதிப்பு 1939-03-05ல் வெளியிடப் பட்டுள்ளது. எமது கைக்குக் கிடைத்தது மூன்றாம் பதிப்பு. இப்பதிப்பின் 6ம் பக்கத்தில் 'தமிழர் உற்பத்தி' என்னும் தலைப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'ஆராய்ச்சியாளர் தமிழரின் உற்பத்தியைக் குறித்து ஒருதலைப்படக்கூறாது பலதிறப்படக் கூறியிருக்கின்றனர். அவற்றை அறிதல் தமிழர் வரலாற்றின் சில பகுதிகளை விளங்கிக் கொள்வதற் குத் துணைபுரியும். அவற்றுள் சில முக்கிய கொள்கைகளை இங்கு கூறுகின்றோம்.

1. மத்திய ஆசிய அல்லது சிந்திய உற்பத்தி
2. மங்கோலிய உற்பத்தி
3. சுமேரிய உற்பத்தி
4. இந்து ஆப்பிரிக்க அவுஸ்திரேலிய உற்பத்தி
5. மத்தியதரை உற்பத்தி
6. பி.தி. சீனிவாச ஐயங்காரின் கொள்கை
7. இலங்கை உற்பத்தி
8. சிந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரீகம்

இதில் நாம் இலங்கையுற்பத்தி பற்றி என்ன சொல்லப் பட்டிருக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

இக்கொள்கைப்படி மனிதன் ஆதியில் இலங்கையிலேயே உற்பத்தியாகி ஜாவா முதலிய நாடுகளுக்குச் சென்றிருக்கின்றான். யாவானியரு டைய பழையநூல் ஒன்று ஆதாமின் வமிசத்தில் உள்ள பிரமா யாவாவிற் சென்று மக்கட் சந்ததியைப் பெருக்கினர் என்று கூறுகின்றது. இலங்கையில் உள்ள ஆதம்பாலம், ஆதம்மலை முதலியன இக்கொள்கைக்கு ஆதாரமாகும்.

"இதை (ஆதம்மலையை) ஆதிப் பெற்றோர் சாபம் பெற்றபின் வாழ்ந்த இடமெனக் கொள்வர் அராபியர். பூர்வ கிறிஸ்தவர்கள், ஆதாம், ஏவாள் இவ்விடத்தில் செழித்து வளர்ந்த ஒரு தருவின் கனியைப் புசித்து, ஒரு விசாலித்த இலையை உடுத்தார்களென் கின்றனர். இதன் சிகரத்திற்குச் செல்லும் பாதைகளுள் இலேசான பாதையை (ஆதாம் ஏறிச் சென்றதால்) பிதாவின் பாதை என்றும் அழைப்பர்.

இவ்வாறு இலங்கையுற்பத்தியில் கூறப் பட்டுள்ளது. இதுவும், பேராசியர் தெய்வநாயகம் அவர்களின் கூற்றும் ஒத்துப் போகின்றது அல்லவா?

இதற்கிடையில் பேராசிரியர் தெய்வாயகம் அவர்களின் சில ஒப்பீடுகளும் சிந்திக்க வைக்கின்றன.

இந்துத் தத்துவப்படி இறைவன் பரமசிவன்: முதல் மனிதன் ஆதிசிவன்.

கிறிஸ்துவ தத்துவப்படி இறைவன் பரமபிதா; முதல் மனிதன் ஆதாம்.

முதல் மனிதனின் எலும்பிலிருந்தே பெண் உருவாக்கப்பட்டுள்ளாள். இந்துக் கொள்கைப்படி ஆணும் பெண்ணுமாக ஆதிசிவன் காணப் படுகின்றான்

இரு சமயத்தாருக்கும் பாம்பு தொடர்பு டையது. சிவனின் கழுத்தில் பாம்பு: ஆதாமை சோதித்தது பாம்பு. காயினும், ஆபேலும் தாவரங்களின் உற்பத்தி (காணிக்கையாக கொடுக்கப்பட்ட காய்கறி) யால் பிரச்சினைப் பட்டனர்.

முருகனும், பிள்ளையாரும் தாவர உற்பத்தி யால்தான் (மாங்கனி) பிரச்சினைப்பட்டனர்.

பேராசிரியர் தெய்வநாயகம் அவர்களின் ஒப்பீடு கிறிஸ்துவ, இந்து வணக்க முறைகள் பற்றி நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி + வீடியோ கேம் = உங்கள் பிள்ளைகள்



இளைஞர்களுக்கு கணினி வகுப்பு, பெண்களுக்கு ஜிம்னாஸ்டிக் வகுப்பு, அம்மாக்களுக்கு தொலைக்காட்சி, ஓய்வுபெற்ற அரச உத்தியோகஸ்தர்களுக்கு N.G.O களில் வேலை வாய்ப்பு. இவ்வாறு எல்லா வகுப்பினர்களுக்கும் 'துறைகள்' கடைவிரித்த நிலையில் இறுதியாக இதில் சேர்க்கப்பட்டவர்கள், இவ்வலையில் விழுந்தவர்கள், குழந்தைகள், சிறுபிள்ளைகள் ஆவார்கள். இவ்வபதெல்லைகளைக் கொண்டவர்களுக்கு முதல் வலை விரித்தவர்கள் 'ஆங்கில மீடியா, மம்மி, டடி, அங்கிள், அன்ரி' பாடசாலைகள் ஆகும். இவர்களைத் தொடர்ந்து வெற்றிக்கான பாதை விரித்தவர்கள் கணினி நிறுவனங்கள் ஆகும். இவர்கள் மணித்தியாலத்திற்கு ரூபா 35 தொடக்கம் 40 வரை அறவிட்டு 'வீடியோ விளையாட்டு'க்களை உருவாக்கினர். இதன் தொடர்ச்சியாக பல பாடசாலைகளும் இதனைப் பின்பற்றி வீடியோ கேம் விளையாடும் புது சந்ததியை உருவாக்கியுள்ளன.

இன்று நமது குழந்தைகள் பலர் காரணமேயில்லாமல் தொலைக்காட்சியைப் பார்ப்பது பழகிப்போன ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. றொபின் ஸ்மித் என்பார் தொலைக்காட்சி பார்த்துக்கெண்டிருப்பவர்களை அடிமை நடத்தை உடையவர்கள் *(Addict Behaviors)* என்கிறார். இத்தகைய அடிமை மனநிலை குழந்தைகளை மாத்திரமல்ல வயது முதிர்ந்தவர்களையும் கூட பாதித்துள்ளதை இன்றைய நடைமுறையில் காணலாம். றொபேட் மைக்கல் என்கின்ற ஆய்வாளரும் "தொலைக்காட்சி போதைப் பொருளுக்குச் சமமாக பாவிக்கப்படுகின்றது. இவைகளைத் தொடர்ந்து பார்ப்பவர்கள் அதற்கு அடிமைகளாக மாறி விடுகிறார்கள்" என்கிறார். அலன் ரூபன் என்பவர் தொலைக்காட்சி பார்ப்பவர்கள் தொடர்பான ஆய்வில் சில முடிவுகளைக் கூறுகின்றார்.

***இவர்களுக்கு எதன் மீதும் நாட்டம் இருக்காது, எதிலும் முழு ஈடுபாடு காட்ட மாட்டார்கள் என்பதாகும். மேலும் இவர்கள் புத்தகம் படிப்பவர்கள் போல் தெரிவார்கள். ஆனால் அதில் கவனமோ, ஈடுபாடோ இருக்காது என்றும் கூறுகின்றார்.***

தொலைக்காட்சி நிரலை தண்ணிப் பாடமாக்கி சொல்லும் மாணவர்கள், பிள்ளைகள் இத்தகைய நிலையை அடைந்து விட்டார்கள் என்று நம்மில் எத்தனை பேர் கவலை அடைகின்றோம்? 'பிள்ளைகள் தொல்லை தராமல் எதையாவது பார்த்திட்டுப் போகட்டும்' என்று இருந்துவிடப் போகிறோமா...?

குழந்தைகள் தொலைக்காட்சிகளை பார்ப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கான ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர் டிப்பான் வியூரன் என்பார் 'தப்பித்தல்' காரணத்துக்காகவும் தொலைக்காட்சியில் சிறுவர்கள் மூழ்கி விடுகிறார்கள் என்கிறார். இவர்கள் எதில் இருந்து தப்பிக்க விரும்புகின்றார்கள்?

***தங்களின் வழமையான கடமைகள்***
***கசப்பான நிஜ வாழ்க்கை***
***தங்களின் இயலாமைகளை மறுத்தல்***
***உண்மை வாழ்விலிருந்து விம்ப வாழ்க்கைக்குள் செல்லல்.***

தங்களுக்கு ஏற்படும் பல்வேறுபட்ட மன உளைச்சல்களில் இருந்து விடுபட தொலைக்காட்சியை நோக்கி ஓடுகிறார்கள். எனவே பல்வேறு காரணிகளில் தப்பி விலகிச் செல்லும் இவர்கள் பின்வரும் மனநிலைகளை அடைகின்றார்கள் என்ற முடிவையும் நமக்குத் தருகின்றார்.

**இருந்தால் சாப்பிடுவோம். இல்லையோ இருப்போம். கிடைத்தால் என்ன? கிடைக்கவில்லையென்றால் என்ன? எதைச் சாதிக்கப்போகிறோம்?**

**வந்தால் வரட்டும், வரவில்லையென்றால் போகட்டும்.**

இத்தகைய மனநிலை கொண்டவர்கள் நாளடைவில் வாழ்க்கையில் பிடிப்பற்றவர்களாகி ஏடுபிடிவகுப்பினராகியும் விடுவதாக கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது போக்குக்காக தொலைக்காட்சி பார்ப்பவர்கள் நிபந்தனைக்குட்படுத்தப்பட்ட நடத்தையுடையவர்கள். (Conditional Behaviour) என்னும் உளத்தாக்கத்திற்கு உள்ளாகின்றார்கள் என்று ஆய்வாளர் ஏகார்டன் கூறுகிறார். நமது வீட்டில் குழந்தைகள் பின்வரும் சூழ்நிலைகளில் தொலைக்காட்சியை நாடுகிறார்கள்.

**பாடசாலைக்குப்போகும் நேரம் வரை**

**அப்பா அல்லது அம்மா வரும்வரை**

**படிக்கும் நேரம் வரை**

**ஓய்வு நேரம் வரை**

இவர்களைப் பொறுத்தவரை பின்னணி இசை போலத் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பது, பேசுவது, சாப்பிடுவது, எழுதுவது, ஏன் தூங்கும் போது கூட தொலைக்காட்சி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். உண்மையில் தொலைக்காட்சி பார்ப்பதற்கென நமது குழந்தைகளுக்காக நாம் அல்லது அவர்கள் செலவிடும் நேரம் உண்மையில் எதற்குச் செலவிட வேண்டும்...? அதை நாம் யோசிப்பதில்லை.

**குழந்தைகள் படிக்கின்ற நேரம்**

**விளையாடுகின்ற நேரம்**

**ஓய்வு நேரம்**

இவற்றுக்கான நேரத்தையே நாம் நமது பிள்ளைகளுக்கு 'தொலைக்காட்சி' பார்க்க வழங்கி வருகின்றோம். தென் ஆபிரிக்கா, கனடா போன்ற நாடுகளில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகளை பல ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்த டைனா மூட்ஸ், டானிஸ் மேக்பர் போன்றோர் பல முடிவுகளைத் தந்திருக்கிறார்கள். தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் பாதிப்புக் களில் நாம் அதிகம் கவனம் கொள்ள வேண்டிய பாதிப்புக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடு கிறார்கள்.

**படிப்பு நேரம் குறைவு**

**விளையாட்டு நேரம் இல்லை**

**தூக்க நேரக்குறைவு**

**இளையோர் ஆன்மீக விடயங்களில் நாட்டம் இன்மை.**

தொலைக்காட்சியில் இலயித்துப் போதல் இவ்வாறு அமையும்போது 'வீடியோ கேம்' என்னும் தொலைக்காட்சி விளையாட்டு இன்று ஒரு வகையில் நமது குழந்தைகளைப் பாதிக்கப் போகின்றது. ஆரம்பத்தில் புள்ளிகளை இணைத்தல், கோடுகளை வரைதல், சதுரம், செவ்வகம், முக்கோணம், என கணித ரீதியான அறிமுகம் முதலில் கிடைக்கின்றது. பின்னர் பறவைகள் விலங்குகளுக்கிடையே கோலச் சித்திரங்களை உருவாக்கி மோதவிடுவதை ஏற்படுத்தினர். இத்தகைய விம்பங்களை ஓடவிடுவது, மோதவிடுவது, விரட்டுவது, முந்துவது, போன்றவற்றை உருவாக்குகின்றனர். இதன் மூலம் ஆரோக்கியமான போக்குகளை வளர்க்காமல் போட்டி மனப்பான்மையை வளர்க்கின்றனர். உதாரணம்: சிங்கம் - மான், நாய் - பூனை,கோழி - பருந்து என எதிரெதிரே மோதவிடல், பலம் குன்றியதைத் தோற்கடிப்பது, வீழ்த்துவது என வழமையாக்கப்படுகின்றன. இத்தகைய விளையாட்டுக்கள் பிஞ்சு மனங்களில் வக்கிரத்தையும் வெறியையும் தோற்றுவிக்கின்றன.

இன்று மனித உருவங்களை மோத விடுவதுபோல் விளையாட்டுக்கள் வளரத் தொடங்கியுள்ளன. இதனால் எஞ்சியிருக்கும் மனித நேயச் சிந்தனையும் மறக்கப்பட்டு மிருக மனப் பான்மை வளர்வதற்கு மனங்களில் வக்கிரமும் வெறியும், வளரத் தொடங்கியுள்ளன. வன்முறையை நிராகரிப்பதற்குப் பதிலாக அவற்றை நேசிக்கவும் ஆரம்பித்து விட்டனர். பாடசாலைகளில் இருந்து வெளியே வராத செய்திகளும் பத்திரிகைகளில் வரும் செய்திகளும் வன்முறை எவ்வாறு நமது பிள்ளைகளோடு இரண்டறக் கலந்துள்ளது என்பதைக் காட்டி நிற்கின்றன.

வீடியோ விளையாட்டுக்கள் இன்னும் முன்னேறி பிள்ளைகளே விரும்பிய உருவங்களைத் தேவைக்கு ஏற்றவாறு உருவாக்கவும் கையில் துப்பாக்கிகள் கொண்டு சுடவும் வீடியோ விளையாட்டுக்கள் வந்துவிட்டன. ஆண் பெண் உறுப்புக்களைக் கூட்டிக் குறைத்து எப்படியும் உருவாக்கி எவ்வாறான முயற்சிகளையும் வீடியோ விளையாட்டுக்களில் மாற்ற தொழில்நுட்பம் வகை செய்துள்ளது. இதன் பாதிப்புக்களை நோக்கும் போது மனிதரோடு உறவு, தொடர்பு கொள்வதற்குப் பதிலாக பிம்பங்களுடன் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். விளையாட்டில் வெற்றி பெற வேண்டும் என இருக்கும் தொடர் ஆர்வமானது எதிர்காலத்தில்தில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எத்தகைய வழிகளையும் பின்பற்றும் மூர்க்கத்தனம் வளர்வதை தவிர்க்க இயலாத ஒன்றாக்கிவிடும். மற்றவர்கள் பற்றி எத்தகைய அக்கறையும் அற்றவர்களாக இவர்கள் மாறு வார்கள். துரத்தும்போது ஓடுபவர்கள் வாழ்க்கை யில் தன்னம்பிக்கை அற்றவர்களாக தாழ்வுமனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையோடு தம்மை ஏற்றுக்கொள்ளா தவர்களாக, கோழைகளாக வாழத் தொடங்கி விடுகின்றனர். கிட்டிப்புள் அடித்தலில் இருந்து விடுகதை போடுதல் வரையான நமது விளையாட்டுக்கள் இன்று இல்லாமல் போய்விட்டன.

ஒரு நபருக்கு மேற்பட்டோ அல்லது குழுவாகச் சேர்ந்து விளையாடும் போதோ ஏற்படும் நல்லிணக்கம், தவறுகளை உணர்ந்து திருந்துதல், உண்மை, அன்பு, நேர்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, நன்னெறி இவைகளையெல்லாம் எமது அன்றைய விளையாட்டுக்கள் எமக்கு வழங்கின. இன்று விளையாட்டுக்கள் நமக்கு வழங்குபவை எவை?

வடக்கில் நடந்து முடிந்த பெரும் போர் விளையாட்டுக்களின் போது மாணவர்கள் தாராளமாக குடிபோதையில் நின்றதையும் ஒரு குழுவை இன்னுமொரு குழு விட்டுத் துரத்திய தையும் முகம் உடைந்தவரை மோட்டார் சைக்கிளில் தூக்கிச் சென்றதையும் கண்டபோது யாழ்ப்பாண மாணவர் கலாசாரம் நிற்கும் இடம் தெளிவாகத் தெரிந்தது. சில மாதங்களுக்கு முன்னர் நடந்து முடிந்த குருநகர் திருநகர் மோதலை அவதானிக்கும்போது பெரிய கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் தடி தண்டு வாள் குண்டுகளுடன் போரிட்டதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

*நன்றி :- ஆத்மா*

## சமாதானத் தூதுவன்



*பாசமுடனும் தினம்*
*நேசமுடனும் எமை*
*நேரிய வழிநடத்திய*
*பார்போற்றும் பாப்பாண்டவரே!*
*இரண்டாம் அருளப்பர் சின்னப்பரே!*

*பண்பாளராய்ப் பலர்*
*அன்பிற்கும் பாத்திரமான*
*அன்பராய்ச் சகல மத்தினரும்*
*இனத்தினரும் வாழ்த்தும் எங்கள்*
*இவ்வுலகக் கத்தோலிக்க மேய்ப்பரே!*

*பிரிந்தீரோ எமைவிட்டு*
*நீத்திரோ இவ்வுலக வாழ்வை*
*எளிமையும் உம் ஒவ்வொரு*
*புன்முறுவலும் சொல்லுமைய்யா*
*உம் கள்ளமில்லா உள்ளத்தை*

*இராயப்பர் பணியைத் தொடர்ந்து*
*இனிதாய் நிறைவேற்றிய எம்*
*கலியுக ஆயனே! சமாதானத்தூதுவனே!!*
*இறைவன் உம்மை ஆசித்து*
*இன்பமாய் மோட்சக்கதவைத் திறந்துவிடுவாராக!!!*

F.J. தீலீபன்
இருதயபுரம், மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நவீன சவால்களுக்கு முன்னிலையில் திருச்சபை**

இன்றைய சமுதாயம் மிக வேகமாக இலௌகீக மயமாகிக்கொண்டு வருகிறது. திரிபுபட்ட, மனிதத் தன்மையற்ற, உளப்பண்புகள் பேணப்படாத நிலையில் காணப்படுகிறது. இப்படிப்பட்ட உலகில் பயணஞ் செய்து கொண்டிருக்கும் திருச்சபையானது தனது மீட்பு அலுவலில் பல பிரச்சனைகளுக்கு, சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

1. நவீன விஞ்ஞான வளர்ச்சி
2. இலௌகீக மயமாதல்
3. இறைமறுப்புக் கொள்கை
4. தொலைத் தொடர்ப்புச் செய்திகளின் முன்னேற்றம் ஆகியன சவால்களாக உள்ளன.

**1. நவீன விஞ்ஞான வளர்ச்சி**

நவீன விஞ்ஞான வளர்ச்சி அவசியம் ஆனால் அனைத்தையும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பார்ப்பது தவறு. இறைவன் இல்லை, உலகம் இறைவனால் படைக்கப்படவில்லை என எடுத்துக் காட்டுகின்றனர் விஞ்ஞானிகள். ஆயினும் அவர்களால் உலகம் எவ்வாறு உண்டானதென நிரூபிக்க முடியவில்லை. எனவே விஞ்ஞானிகளுக்கும், அவர்களின் பரிசோதனைகளுக்கும் உலகிலுள்ள அனைத்தும் அடங்குவதில்லை.

**2. இலௌகீக மயமாதல்**

பணம், பொருள், செல்வம், சுகபோகம் ஆகியவற்றால் மனிதன் வேகமாகத் துரத்தப்படுகிறான். இவ்வுலக வாழ்வின் முடிவான மரணத்தின் பின்னர் பரலோக வாழ்வுண்டு என்பது பற்றி நினையாத அவன் இவ்வுலக நலன்களை மட்டும் கவனிக்கிறான். மேலுலக வாழ்வைப் பற்றிய எண்ணமே அவனுக்கில்லை. இவ்வாறு இலௌகீக செல்வத்தைத் தேடியலையும் மனிதனையும் இறையரசை நோக்கி நடத்திச் செல்வது பெருஞ் சவாலாக உள்ளது.

**3. இறைமறுப்புக் கொள்கை**

சில அரசியல் குழுக்கள் தம்மை உயர்த்த நினைத்து, அனைத்தும் இவ்வுலகத்தோடு முடிவடையும் எனக்கூறி மறுப்புக் கொள்கையை நிலைநாட்ட முயற்சிக்கிறது. இறைவன் இல்லாத ஓர் உலகை உருவாக்குவதே தேவையாகவுள்ளது. எனவே இதுவும் ஒரு சவாலக உள்ளது.

**4. தொலைத் தொடர்ப்புச் செய்திகளின் முன்னேற்றம்**

இப்பரந்த உலகை, தொலைத் தொடர்புச்சாதனங்கள் ஒரு சிறு கிராமமாக்கி, மனிதனின் வாழ்வை அவலப்படுத்துகின்றன. மதவேற்றுமை, பாலியல் துஷ்பிரயோகம், மற்றும் பல தீமைகளுக்கும் இவை காரணமாகி விடுகின்றன. இது திருச்சபைக்குப் பெருஞ் சவாலாகவுள்ளது. திருச்சபை நன்மையானவற்றை விதைக்கையில், சில தொடர்புச்சாதனங்கள் தீமையை விதைக்கின்றன. எனவே, திருச்சபை அத் தொடர்புச் சாதனங்களையே ஆயுதமாகக் கொண்டு அச்சாவாலுக்கு முகங் கொடுத்தல் வேண்டும்

* இத்தகையை பல சவால்களுக்கு மத்தியில் திருச்சபை பின்வாங்காது முன்னோக்கிப் பயணஞ் செய்கிறது. திருச்சபையின் வரலாற்றை நோக்கும் போது ஒவ்வொரு யுகத்திலும் திருச்சபை பலதரப்பட்ட சவால்களை எதிர்நோக்கி வந்துள்ளது. அச்சந்தப்பங்களிலெல்லாம் தூய ஆவியாரின் வல்லமையால் அவையனைத்துக்கும் முகங்கொடுப்பதில் திருச்சபை வெற்றி பெற்றுள்ளது.

* திருச்சபை, பேதகங்கள், வேத கலாபனைகள் போன்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அசைவுறாதிருந்தது. ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறு நபர்கள், பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் திருச்சபையின் மீட்புப் பயணத்தில் தலைமை தாங்கியுள்ளனர். 13ம் சிங்கராயர், 23ம் அருளப்பர் ஆகிய பரிசுத்த பாப்பிறைகளுடன் சமீபத்தில் எமை விட்டு விண்ணகம் சென்ற பரிசுத்த பாப்பிறை 2ம் அருள் சின்னப்பரும் இத்தகைய தலைவராவார்.

* நவீன உலகச் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய மாணவராகிய நீங்கள் சமயப்பற்றில் உறுதிப்படவேண்டும். பங்கின் பக்திச் சபைகளிலிணைந்து பணிபுரிய முன்வரல் வேண்டும். தம்மை இறைபணிக்கு அர்ப்பணிக்க வேண்டும். பங்கின் மறைக்கல்வி வகுப்புக்கள் மூலம் போதிய வழிகாட்டுதலைப் பெற முடியும்.

* நற்செய்தியை வாசிக்கவும், சிந்திக்கவும் செய்யுங்கள். தூய யோவான் நற்செய்தி அதிகாரம் 21 திருவசனங்கள் 15-19வரை.

மெற்றில்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




R. ஸ்ரான்லி பிரபாகரன்

## மனநலம் காப்போம்

மனித வாழ்வின் திருப்தியையும், திருப்தி இன்மையையும் நிர்ணயிப்பதில் மனம் முக்கிய பங்கு வகிக்கின்றது.... எனவே, இதைப் பற்றி நாம் அக்கறை எடுத்தேதான் ஆகவேண்டும். எம்மிடம் மனம் என்று ஒன்று உண்டு. அதனை நாம் உணர வேண்டும். மனதோடு இணைந்த இந்த வாழ்க்கையிலே சிக்கல்கள் ஏற்படுகின்றபோது எமது எல்லாச் செயல்களுமே சிதைந்து பொருளற்றதாகிவிடும். அத்தோடு நாம் அன்றாடம் கண்விழிப்பது தொடக்கம் கண்ணுறங்குவது வரை எமது உணர்வுகளோடும் தேவைகளோடும் ஒன்றித்திருக்கின்றதே குடும்பம், அக்குடும்பங்களின் நலனும் கெட்டுவிடும். குடும்ப நலம் கெட்டால் சமூகமே சிதைந்துவிடும். சமூகம் சிதைந்தால் உலகமே அமைதியின்மையாலும், அநாகரீக வாழ்வினாலும் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் பொலிவை இழந்துவிடும். இதுபற்றி நாம் ஆழமாகச் சிந்திக்கச் சிந்திக்க மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கை தொடக்கம், உலகின் இயக்கம்வரை நிம்மதியோடும், நலமாகவும் வாழ வேண்டுமானால் மனநலத்தைப் பேணவேண்டும் என்ற உண்மை புலப்படும்.



உலகத்தை உருவாக்கவும், உருக்குலைக்கவும்தக்க அந்த மனதைக் கண்ணும் கருத்துமாகப் பேணவேண்டும். அது நம்கையிலேயே உள்ளது. மனிதனின் வாழ்வியலின் அம்சங்களை ஆட்டிப் படைப்பது மனம்தான் என்பது கற்பனை அல்ல. அது ஆய்வுகளால் நிருபிக்கப்பட்ட உண்மையாகும். நானும், நீயும் மனநலத்துடன் வாழ்ந்தால் மனநலமற்று இருக்கின்றவரையும் நலமுடன் வாழவைக்க முடியும். நானும் நீயும் அவரும் மனநலத்துடன் இருந்தால் நாங்களும் நீங்களும் அவர்களும் நலம் பெறுவோம். இந்த மூன்றும்தானே உலக சமூகம். எனவே, உலகமே நலம் பெறவேண்டுமாயின் நாம் மனநலத்துடன் வாழ வேண்டும் என்பது யதார்த்தமாகும்.

ஒருவரின் புறத்தோற்றத்தைக் கண்டு அவர் நலமாகத்தான் வாழ்கின்றார் என எடுத்த எடுப்பிலேயே நாம் முடிவுகட்டி விடுகின்றோம். ஆழமாக மனித வாழ்வின் உண்மையை உணராதோரின் முழுமையற்ற கணிப்பே இதுவாகும். ஒருவர் நன்றாக உடுத்திருக்கலாம், கைநிறையக் காசு, பொருள் வைத்திருக்கலாம், நோயற்றவராக இருக்கலாம்; சிரித்துப் பேசிக் கொண்டு இருக்கலாம், இப்படிப் பட்ட ஒருவர் மன நலத்துடன் இருக்கின்றார் என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. அவரது உள்ளத்தின் ஆழத்திலே மறைந்து கிடக்கின்ற சிக்கல்களை சிலவேளைகளிலே அவராலேயே கண்டு கொள்ள முடியாத நிலைதான் மனத்தின் ஆழமாகும். அத்தகைய ஆழமுடைய மனித மனத்தை பல உளவியலாளர்கள் ஆய்வுசெய்யத் தொடங்கி விட்டார்கள். அப்படியாயின் எமது மனதைப் பற்றி அந்த அறிஞர்கள் கூறிய கருத்துக்களை அறிய எமக்கு நிறையவே ஆவலாக இருக்கின்றதல்லவா?

ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புக்களைப் பற்றி அறிந்து கொள்ள முன்னர், மனித மனத்தைக் கற்றுக்கொள்வதனால் என்ன பயன் விளையும் என்பதைத் தெரிந்து கொள்வோம். மனம் நலமுடன் இருந்தால் தான் எமது உடலும், வாழ்வும் ஏன் சற்று அகலமாகப் பார்த்தால் எமது உழைப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வாழ்வு என்று உலக நடைமுறையே நலமுடன் அமையும்.

"எனது மனம் சுமையை உணர்கின்றது" இன்று என்மனம் புண்பட்டு விட்டது" "எனது மனம் மகிழ்ச்சியாக உள்ளது" "இன்று எனது மனம் படபட வென்று அடிக்கின்றது" "நான் மனம் நொந்து விட்டேன்" என்றெல்லாம் நாம் அன்றாட வாழ்வில் கூறுகின்றபோது மனதைப் பற்றி நாம் எதையோ உணர்கின்றோம், அறிகின்றோம் என்பதுதான் பொருள். ஆனால், மனவியல் அல்லது உளவியலாளர்களின் கருத்துக்கள் இவற்றிலும் ஆழமானவை. அதாவது அவர்கள் கூறும் மனநோய், மனநலம் பற்றிய கருத்துக்களை நாம் மேலும் ஆழமாகக் கற்றுக் கொள்வதனால் மனநலம் பற்றிய விழிப்புணர்வு எமக்குள்ளேயே தோன்றுகின்றது. எனினும் மனம்பற்றி மனிதன் சாதாரணமான நிலையில் இருந்து உணரும் கருத்துக்கள் உளவியல் ஆய்வுகளில் பயன் படுகின்றன. மனம் பற்றி சாதாரணமான நிலையில் இருந்து உணர்வதையும், அறிவதையும்விட இன்னும் ஆழமாக அறியவேண்டும் என்ற ஆவல் எம்மிடம் வளர்கின்றதல்லவா? பொதுவாக மனிதனுக்கு எதையாவது புதிதாக அறிந்து கொள்வதில் ஆவல் உள்ளது. அதிலும் தன்னைத் தானே அறிந்து கொள்வதில் ஆர்வம் இன்னும் அதிகமாக இருக்கும். என்னைப்பற்றி மற்றவர் சொல்லும் மதிப்பீடுகளில் அக்கறை காட்டுதல், சோதிடம் பார்த்தல் போன்றவற்றில் அக்கறையாக இருப்பதற்கு இதுவும் காரணமாக இருக்கலாம்.

எம்மிடம் மனநலம் குன்றியிருக்கின்றதா அல்லது எனது மனம் நலமுடன் இருக்கின்றதா என்பதை அறிய வேண்டும். மனித மனம் பற்றிப் படிக்கின்ற போது அதனை எம்மிடம் இருந்தே ஆரம்பித்தால் அது நமக்குத் தெளிவாகவும் நலமாகவும் இருக்கும்; எமக்குப் பலனையும் தரும். எனவே, பின்வரும் வகைகளில் நம்மை நாமே சோதித்துப்பார்ப்போம். பின்வருவன மனநலம் உள்ளவர்களின் பண்பாகும். இவை நம்மிடம் இருக்கின்றதா இல்லையா என்பதை நாம் நிச்சயமாக அறிவோம்...

1. தன்னையும், பிறரையும், சூழலையும் ஏற்றுக் கொள்ளுகின்ற பண்பு. அதாவது தன்னிடம் உள்ள குறைகளைப் பெரிதென நினைத்துக் கவலைப்பட மாட்டார்கள். அதேவேளை பிறரின் குறைகளைப் பெரிதுபடுத்தி அவர்களைக் குறைவாக எண்ணவோ, பிறர்முன் அக்குறைகளைப் பெரிதுபடுத்தி அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கவோ மாட்டார்கள். அதேவேளை தன்னுடையதும், பிறருடையதும், ஆற்றல்கள், திறமைகள் என்பனவற்றைக் கண்டு இயல்பாகவே மகிழ்ச்சி அடைவார்கள். அத்தோடு இயற்கையின் தன்மையை (சீற்றம், பயன் தருதல்) ஏற்றுக்கொண்டு வாழ்வார்கள்.

2. புறக்காரணிகளின் தூண்டுதலால் தம்மை மாற்றிக் கொள்ளாமல் எளிமையான வாழ்க்கை வாழ்தல். தனதும், உலகத்தினதும், இயல்புத் தன்மையைப் புரிந்துகொண்டு வாழ்வது எளிமையான வாழ்வின் பண்பாகும். மற்றவர்கள் தம்மைக் குறையாக நினைத்து விடுவார்களே என்னும் பயத்தினால் தமது நடை, உடை, பாவனை என்பவற்றை மாற்றிக்கொள்ளத் துடிக்கமாட்டார்கள். மற்றவர்களின் தூண்டுதலால் முடிவெடுக்கமாட்டார்கள். அதேவேளை மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பார்கள்.

3. செயற்படும் போது ஜனநாயகப் பண்புடன் செயற்படுதல். அதாவது தமது கருத்துக்களை மற்றவர்கள் மேல் திணிப்பதற்காக அதிகாரத்தை ஆயுதமாகக் கையாளமாட்டார்கள். மாறாக தமது கருத்துக்களின் பக்கம் நியாயம் இருக்கின்றபோது அதனைப் பக்குவமாக எடுத்துக் கூறுவார்கள். இதனால், வார்த்தைகளாலோ, செயல்களினாலோ மற்றவர்களை வன்முறைக்குள்ளாக்குகின்ற பண்பு இவர்களிடம் வளர்ச்சி அடையாது.

4. நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிகின்ற பண்பு இருக்கும். அதாவது, நல்லதையும், கெட்டதையும் பற்றித் தெரியாமல் குழம்பிக் கொள்வதோ, ஒருநேரம் ஒன்றை நல்லது என்றும், மற்றநேரம் அதைக் கெட்டது என்றும் கூறுகின்றமையோ, நல்லதைக் கெட்டது என்றும், கெட்டதை நல்லது என்றும் விதண்டா வாதம் செய்கின்றமையோ காணப்படாது.

5. தம்மைப் பரிசுத்தவான்கள் என்றும் மற்றவர்களைப் பாவிகள் என்றும் கூறாத தன்மை. ஒரு துறையைப் பற்றி அல்லது ஒருவரைப்பற்றி அரைகுறையாக அறிந்துவிட்டு அவர்கள் பிழையானவர்கள் என்று முடிவுகட்டமாட்டார்கள். அதேவேளை தாம் சாதாரண மனிதப் பிறவி என்பதை நன்குணர்ந்து வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பலருடைய பண்பாட்டையும் ஏற்றுக்கொள்வதோடு, புதிது புதிதாக எதையாவது படைக்க வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களாகக் காணப்படுவார்கள்.

மேற்சொன்ன பண்புகள் சிலரோடு மிகவும் நெருக்கம் உடையதாகக் காணப்படலாம். ஆனால், சிலருக்கு அவ்வாறு இருக்காது. இதனை அடைவது கடினம் என எண்ணுவோர் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் மேற்சொன்ன மனநலனுக்குரிய எல்லாப் பண்புகளுமே நமக்குள்ளேயே மறைந்து கிடக்கின்றன. எனவே நமக்குள்ளேயே மறைந்து கிடக்கும் அந்த ஆழத்தைப் பற்றி மேலும் சிந்திப்போம். அப்போது பல உண்மைகள் வெளிப்படும். அடுத்தடுத்த இதழ்களில் வாழ்வைப் பற்றியதும், மனதைப்பற்றியதுமான பல உளவியல் தகவல்கள் பல உண்மைகளைப் புலப்படுத்தும். அப்போது எமது மனத்தை நாம் கையாண்டு மன நலம் பெற வாய்ப்புண்டாகும்.




சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் பேரினவாதிகள் காட்டிவரும் மூர்க்கத்தனமான எதிர்ப்பு, சிறுபான்மை இன மக்களின் போராட்டத்தில் உள்ள நியாயத்தையும், அதனை எதிர்கொள்வதில் சிங்களப் பேரினவாதம் கொண்டுள்ள இறுகிய மனப்பான்மையையும் மிகத் தெளிவாக சர்வதேச சமூகத்திற்குக் காட்டியுள்ளது.

தற்போதுள்ள திட்டப்படி சுனாமி நிவாரணக் கட்டமைப்பு ஓராண்டுக்கு மட்டுமே நடைமுறையிலிருக்கும். இக்கட்டமைப்பில் மூவினப் பிரதிநிதிகளும் அங்கத்துவம் வகிப்பர். கடற்கரையிலிருந்து இரண்டு கிலோமீட்டர் அளவாக உள்ள பகுதிகளின் புனர் நிர்மாணப் பணிகளே சுனாமிக் கட்டமைப்பின் அதிகார எல்லைகளாக உள்ளன. இதைக்கூடக் கொடுக்க விரும்பாத பேரினவாதிகள் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டி ஆட்சிமுறையை வழங்குவார்களா? நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. காலங்காலமாக தமிழ் மக்களது பிரச்சினைகளையே முதலீடாக வைத்து அரசியல் நடத்தி வந்த சிங்கள அரசியல்வாதிகள் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உளப்பூர்வமாக என்றும் அக்கறை காட்டியதில்லை. இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு பெரும் அரசியல் கட்சிகளும் சிறுபான்மை இனத்தைச் சிறுகச் சிறுக வேரறுத்து சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கைகளையே எடுத்து வந்துள்ளன.

நீண்ட காலமாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தின் கோரங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் ஐ.தே.க. அரசு புலிகளுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளைக் குழப்பி அடித்து குற்றுயிராக்கிய ஜனாதிபதி அம்மையார் இன்று சுனாமிக் கட்டமைப்பையார் எதிர்த்தாலும் நடைமுறைப் படுத்தியே தீருவேன் என்று சூள் கொட்டி நிற்பதைப் பார்த்து யாரும் மயங்க வேண்டியதில்லை. இதற்கு

தொடர்ச்சி 22ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி தந்த கை!

– சிறுகதை –

"மரகதம்! உப்பு எங்க?" "அங்கதானே வைச்சனான், எல்லாம் நானே பார்க்க வேண்டியிருக்கு" மரகதம் முணுமுணுத்தபடி உப்பை எடுத்து விசாலத்திடம் கொடுத்தாள். "இறைச்சியை எடு" என்றபடி உப்பைக் கையில் வாங்கினாள் விசாலம். "நேரம் என்ன?" நாம வெளிக்கிடணும், பொண்ணையும் வெளிக்கிடத்த வேணும். கெதியண்டு வேலையை முடியுங்க" அவசரப் படுத்தினாள் மரகதம். மரகதம் தலையில் பாரத்தோட இருந்தாள். அவள் முகத்தில் ஏதோ இனம் புரியாத கலவரம். வேலையின் பளு அவள் முகத்திலிருந்த வியர்வைத் துளிகளில் மிளிர்ந்தது. கழுத்திலிருந்து பல துளிகள் ஒன்று சேர்ந்து கீழ்நோக்கி ஓடின. முகத்தில் சோகம் கலந்த இன்பம் தாண்டவமாடியது. "மரகதம்மா நேரம் எட்டு மணி" எங்கிருந்தோ வந்த குரல் அவளை மேலும் விரைய வைத்தது. ராஜியின் திருமணம்தான் மரகதத்தின் மனக்கலவரத்துக்கு காரணம்.



மரகதம் ஒரு கிராமத்துப் பெண். அவள் அன்றைய பெண்களைப்போலவே குடும்பகட்டுப்பாடு, சமுதாயம் என்பவற்றுக்கு கட்டுப்பட்டவளாக இருந்தாள். அவள் உலகம் நாலு சுவர்தான். கிணற்றுத் தவளையாகவே வாழ்ந்தாள் மரகதம். அவளை அதிலிருந்து மீட்க வந்தவன்தான் குமாரசாமி. மரகதத்தின் ஊருக்கு வந்தவன் அவள் வீட்டில் மட்டுமல்ல மரகதத்தின் மனதிலும் குடியேறினான். வழக்கம் போல பெற்றோர் எதிர்க்க மரகதம் கட்டுப்பாடுகளை மீறி பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக குமாரசாமியோடு வீட்டை விட்டுச் சென்றாள். அவர்கள் வாழ்க்கை இன்பமாகவே ஆரம்பித்தது. நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக உருப்பெற்ற குடும்ப வாழ்க்கைக்கு அர்த்தங்களாக ராஜன், ராஜி பிறந்தனர். குமாரசாமி தன் குடும்பத்தை கண்ணில் வைத்துக் காப்பாற்றினான். ஆசை மனைவியின் இச்சைகளை நிறைவேற்றினான். பிள்ளைகளுக்காக மாடாக உழைத்தான். மரகதத்தின் முழு உலகமும் அவள் குடும்பந்தான். மரகதம் தன் கணவன்மேல் உயிரையே வைத்திருந்தாள். பெற்றோரின் கஷ்டம் அறிந்த பிள்ளைகளும் அதற்கேற்றாற் போல் இருந்தனர். ராஜனுக்கு படிப்புக் கசந்தது. அவன் வேலைக்குச் சென்றான். ராஜி படுசுட்டி. அவள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகி இருந்தாள். "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாயாக மரகதம் இருந்தாள்.

இவ்வாறு அமைதியான நீரோட்டம் போலிருந்த அவர்கள் வாழ்க்கையில் திடீரென்று புயல் வீச ஆரம்பித்தது. அன்று "என்னங்க நான் மலைக்கோயிலுக்குப் பொயிட்டு வாரேன்!"!, "நானும் வாறேன் மரகதம். மனம் இன்று சரியில்லை" என்றான். "இல்லைங்க ராஜி கெம்பசுக்குப் பொயிட்டா. ராஜன் வருவான். நீங்க வீட்டிலேயே இருங்க. நான் பொயிட்டு சீக்கிரம் வாறேன்" என்று கிளம்பினாள் மரகதம். அதன் பிறகு அவள் தனது கணவரைக் காணவேயில்லை. கணவனை மட்டுமல்ல ராஜாவையும்தான். அவள் மட்டுமல்ல அந்த ஊர் ஏன் அந்த நாட்டு மக்களும் தமது உறவுகளை இழந்து தவித்தனர்.

எங்கும் மரண ஓலங்கள். மக்களின் உயிர்களைப் பலியெடுத்த கடல் அரக்கன் சுனாமி அந்த மரகதத்தை மட்டுமல்ல அவளைப் போன்ற ஆயிரமாயிரம் பேரை பலியெடுத்தது. மக்களின் பரபரப்பில் மரகதம் சற்று நிலைகுலைந்திருந்தாள். கோயிலிலிருந்து அவள் வீடு நோக்கி வரும்போது அங்கு எல்லாம் தலைகீழாய் இருந்தன. "அம்....மா அம்....மா" என்ற முனகல், சனங்களின் கதறல்கள் காதை அடைத்தன. ஆங்காங்கே கால்களும் கைகளும் சிதறுண்டு கிடந்தன. கடல் அரக்கனின் கோபம் இந்தளவா? இதற்கான காரணம்! எங்கும் இரத்த வெள்ளம்! அவலக் குரல்கள்! மரகதம் எதனையும் யோசிக்கவில்லை. தனது வீடிருந்த இடத்துக்கு குத்துமதிப்பாக நடந்து சென்றாள். அவள் தலையில் இடிவிழுந்தாற் போல் தோன்றியது. கண்ணில் நீர் கசிய, இதயம் படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டது. அங்குமிங்கும் பார்த்தாள். தனது கணவரைத் தேடினாள். அவளுக்கு கிடைத்தது அவரது ஒற்றைச் செருப்புதான்.

மரகதம் அம்பு பட்ட மான் போலத் துடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது துன்பங்களை எழுத்துருவிற் சொல்லமுடியாது. அவளுக்கு உலகமே இருட்டானது. கண்ணைக் கட்டி காட்டில் விட்டவள் போலானாள். அன்று காலைச் சம்பவத்தை நினைத்து வருந்தினாள். அப்பொழுதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது ராஜன்! "ராஜன்.... ரா...ஜ....ன் என் மகனே...." என்றபடி மூச்சிரைக்க கீழே விழுந்தாள்.

"ராஜன்..... ரா...ஜன்..." என்று முனகியபடி இருந்த மரகதம் மெல்லக் கண் திறந்தாள். எங்கும் 'கூக்குரலிட்டு அழும் சத்தம் அவளது காதை அடைத்தது. தான் ஒரு கட்டிலில் கிடப்பதை உணர்ந்து மெல்ல எழுந்திருந்தாள். தான் வைத்தியசாலையில் இருப்பதை அறிந்தாள். அவளது கைகளிலும், தலையிலும், மருந்துகள் கட்டப்பட்டிருந்தன. அப்பொழுது அவளின் தோளை ஒரு கை தொட்டது. நிமிர்ந்தவளின் அருகில் அந்தத் தாதி நின்றிருந்தாள். "அம்மா நீங்கள் யார்? உங்களைப் பற்றி கூறுங்கள்" என்றாள். விம்மி விம்மி, திக்கி திக்கி மரகதம் தனது கதையைக் கூறி முடித்தாள். பின் அவளை வைத்தியசாலையின் ஒரு பக்கம் அழைத்துச் சென்றாள். அங்கு பிணங்கள் அடுக்கப் பட்டுக் கிடந்தன. எப்படியோ பிறந்து, எவ்வளவோ ஆசாபாசங்களுடனும், பணத்துடனும் வாழ்ந்தவர்கள் இன்று கேட்பாரற்றுக் கிடப்பதைக் காண கலங்காத வர்கள் யார்? கடல் தந்த உப்பை உண்டவர்கள், இன்று அக்கடலின் உப்பு நீரினாலே அழிந்தார்கள். பிணங்களைப் பார்த்தவள் எங்காவது தன் கணவன், மகன் என்று நினைத்தவளுக்கு மகனின் எண்ணம் நினைவையெட்டியது. தாதியிடம் விபரம் சொன்னவள் கலங்கித் தவித்தாள். ஆறுதல் சொன்ன தாதி வேகமாக ஓர் அறைக்கு அழைத்துச் சென்றவள் மரகதத்தை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு எங்கோ சென்றாள். மரகதம் அவள் செல்லும் திசையைப் பார்த்த வண்ணம் இருந்தாள். சில மணி நேரம் கழித்து வந்தவள் ஓர் அறைக்கு கூட்டிச் சென்றாள். அங்கு ராஜி நின்றிருந்தாள். வயிற்றில் பால் வார்த்தமாதிரி இருந்தது மரகதத்துக்கு, அந்த சந்தோஷம் நிலைக்கவில்லை. தலை சுற்றியது. நெஞ்சு விம்மித் தணிந்தது. கைகளால் கண்களைப் பொத்தி ஓவென்று அழுதாள். தேகம் குப்பென்று வியர்த்திருந்தது. மரகதம் தனது மகன் ராஜனும், குமாரசாமியும் கிடப்பதைக் கண்டு பதறினாள். அவள் வாழ்க்கை இருண்டதாக உணர்ந்தாள். அவ்வளவு தான் அவளுக்கு தெரியும்.

* * * *

நினைக்கவே வியப்பாக இருந்தது ராஜிக்கு. அப்பாவின் இறப்புக்குப் பின் அம்மா எவ்வளவு உறுதியோடு இருந்து குடும்பத்தை நடத்த... சற்று நேரத்தில் அறைக்கு வந்த மரகதம் "ராஜி! சீக்கிரம் ரெடியாகும்மா. மாப்பிள்ளை வீட்டில இருந்து வந்திருப்பாங்க. நாம சீக்கிரம் போக வேண்டும் " அம்மாவின் குரல் கேட்டும் கேட்காதது போல் ராஜியின் நினைவோ பின்நோக்கி சென்றது.

அகதி முகாம்களில் இருந்த ராஜி, மரகதம் இருவரும் அரசாங்க உதவியாலும் வெளிநாட்டவர் உதவியாலும் வீடுகட்டி பழையபடி அங்கு வாழ ஆரம்பித்தனர். நடைப்பிணமாக நடமாடிய மரகதம் ராஜியின் பராமரிப்பில்தான் இருந்தாள். சிறுவயதில் அவளது மடத்தனமான அறியாமையிலிருந்து வெளியே கொண்டு வந்தவன் குமாரசாமி. அவன் இழப்பு மரகதத்துக்கு ஒரு கை உடைந்தாற் போல் இருந்தது. வேப்பம் பூவில் கூட சிறு தேன் துளி போன்று சுனாமி என்ற இராட்சத அலை துன்பத்திலும் மரகதத்துக்கு நம்பிக்கை என்ற கையைக் கொடுத்தது. குமாரசாமியின் விருப்பம்போல ராஜியை வாழவைக்க வேண்டும், தன் கணவர் விரும்பியது போல் துணிச்சலானவளாக வாழவேண்டும் எனத் திடம் கொண்டாள். இனி சுனாமி என்ன எத்தகைய அழிவு வந்தாலும் அவளை சரிக்கமுடியாது. எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியில் மரகதம் ஓயவில்லை. தன்னால் முடியும் என்றளவு உழைத்தாள். அரசாங்கம், குமாரசாமியின் நிறுவனம், ராஜனின் நிறுவனம் என்பன நஷ்டஈடுகள் வழங்கின. அதுமட்டுமல்ல ராஜியும் அவள் வேலைகளில் மட்டுமன்றி மரகதத்தின் துன்பத்திலும் பங்கேற்றாள். ராஜியின் படிப்பும் முடிந்து, வேலையும் கிடைக்க, திருமண வயதும் எட்டியது.

"டும்....டும்.....டும்" மேள நாதஸ்வர ஒலிகள் காதை அடைக்க கழுத்தில் மாங்கல்யம் ஏற ராஜி கண்ணீர் மல்கினாள். மரகதத்தின் முகத்தில் பாரம் குறைந்திருந்தது தெரிந்தது. ராஜி கண்ணீருடன் புகுந்த வீட்டுக்கு அடியெடுத்து வைத்தாள். மரகதம் கணவரின் பொறுப்புக்களை நிறைவேற்றிய திருப்தியில் மகளை அனுப்பி வைத்தாள். மரகதம் தனிமரமில்லை. சுனாமி தந்த கை, ஆம் நம்பிக்கை அவளுக்கு இன்னமும் இருந்தது. சுனாமியால் சொத்துக்களை, உயிர்களை மட்டும்தான் பலியெடுக்க முடியும். மரகதம் போன்றோரின் நம்பிக்கையை அசைக்கக் கூட முடியாது. காலம் சுனாமியை மட்டுமல்ல சுனாமி தந்த பாதிப்புக்களையும் மறக்கடிக்கும் என்பது சத்தியம்.

நேமிநாதன் டிஹாசி
வாழைச்சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெருவெள்ளம்

பெருவெள்ளம் பற்றிய வரலாறு வேதாகமத்தில் மட்டுமல்லாது பல்வேறு கிழக்குப் பிராந்திய புராணக் கதைகளிலும் காணப்படுகிறது. பபிலோனியரிடையே வழங்கும் வரலாறு வேதாகம வரலாற்றிற்கு முற்றிலும் ஒத்ததாக இருந்தது. பபிலோனியா மொசப்பத்தோமியா ஆகிய பகுதிகளில் அடிக்கடி வெள்ளம் வருவது வழக்கம். இதனை அக்கால இலக்கியங்களில் காண்கின்றோம். மேலும் இவ்வெள்ளமானது முழு உலகையும் அழிக்கவில்லை என்பதும் உண்மை. மனித இனத்தையும் முற்றிலும் அழித்ததெனக் கூற முடியாது, இருப்பினும் ஆசிரியர் இயற்கை வரலாற்றைப் பற்றியல்ல, வேதாகமத்தை பற்றியே கூறுகிறார். எனவே, இப்பெருவெள்ள வரலாறு உண்மையாகவோ அல்லது அடையாளமாகவோ கூறப்பட்ட ஒரு கதையாக இருக்கலாம்.

இங்கு வெள்ளப் பெருக்கு மனிதனுடைய பாவத்துக்குத் தண்டனை எனவும், நோவா நீதிமான் ஆனதால், கடவுள் அவரைக் காப்பாற்றினார் என்பதனையும் விளக்குவதே ஆசிரியரின் முக்கிய நோக்கமாகும். ஆதாமோடு கடவுள் ஒப்பந்தம் செய்து மனிதனோடு ஆரம்பித்த தொடர்பு அவனது பாவத்தினால் அறுக்கப்பட்டது. எனவே நோவாவுடன் கடவுள் மற்றொரு ஒப்பந்தம் செய்து மனிதனுடன் திரும்பவும் உறவை ஏற்படுத்துகின்றார். எனவே, ஒரு யுகத்தின் முடிவையும், மறு யுகத்தின் ஆரம்பத்தையும் குறிக்கும் ஒரு நிகழ்வாகவே இப்பெருவெள்ளச் சம்பவம் கூறப்படுகின்றது. இறைவனின் கோபத்தையும், தண்டனையையும், அதேவேளை அவருடைய இரக்கத்தையும் காட்டுவதாகவே இக்கதை அமைகிறது.


இனி வெள்ளப்பெருக்கு பற்றிக் கூறும் அதிகாரங்களை நோக்குகையில் 6ம், 7ம், அதிகாரங்களைக் கவனமாகப் பார்த்தால், பல செய்திகள் இருமுறை கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இரு வேறு பாரம்பரியங்களை இணைத்து எழுதியதன் முடிவே இதுவாகும். ஓர் அதிகாரத்தின் ஒருவரி ஒரு பாரம்பரியத்திலும், மற்ற வரி அடுத்த பாரம்பரியத்திலும் காணப்படுகிறது. உதாரணம்:- இருமுறை இறைவன் மக்களின் சீர்கேட்டைக் காண்கிறார். (தொ.நூ:- 6:13, 7:4)

இருமுறை வெள்ளம் தொடங்குகிறது. தொ.நூல் 7:15, 7:11. மேலும், ஒரு சில முரண்பாடுகளும் காணப்படுகின்றன. ஓர் இடத்தில் 40 நாட்கள் மழை பெய்து, பின்பு தண்ணீர் வடிந்து தரை தென்பட 61 நாட்களாயின என்றும், இன்னோர் இடத்தில் 150 நாட்கள் பூமியை நீர் மூடி இருந்ததாகவும் கூறப்படுகிறது. (தொ.நூ. 07:12, 07:24, 6:20, 7:3) மற்றும் ஓர் இடத்தில் ஒவ்வோர் இனப் பிராணிகளும் ஒரு சோடி எனவும் வேறு ஓர் இடத்தில் 7 சோடிப் பிராணிகள் எனவும் கூறப்பட்டுள்ளது. இம்முரண்பாடுகள் அடுத்தடுத்துக் காணப்படுவதை ஆசிரியர் நன்கு அறிந்திருப்பார், எனினும் இதுபற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில், இச் செய்தி வழியாகக் கடவுள் பாவம் செய்த மனிதனைத் தண்டித்தார் எனவும், நேர்மையாளரைக் காப்பாற்றினார் என்றும் கூறமுனைகின்றார். வெள்ளங்கள் பல ஏற்பட்டதென்பது உண்மை ஆயினும் எப்போது எங்கு நடந்தது என்பதைப்பற்றி ஆசிரியர் கவலைப்படவில்லை.

இச்சம்பவத்தின் வழியாகப் பெரியதொரு உண்மையை விளக்குகின்றார் ஆசிரியர். நோவாவும் அவர் குடும்பமும் இறைவன் முன்னிலையில் நீதியுள்ளவர்களாதலால் காப்பாற்றப்பட்டவர்கள் என்றும், பின்பு அவர்கள் பலி செலுத்தியதாகவும் அதிலிருந்து ஒரு புதிய யுகம் ஆரம்பமானதாகவும், கூறுகிறார். கடவுள் ஆதாமை ஆசீர்வதித்ததுபோல் "இனி நாம் மனிதன் பொருட்டு பூமியை ஒரு போதும் சபிக்க மாட்டோம். சதையுள்ள எந்த உயிரும் வெள்ளத்தினால் அழிக்கப்படமாட்டாது. மண்ணுலகை அழிக்க இனி ஒரு வெள்ளப்பெருக்கு வரவேவராது என்று வாக்குறுதி அளித்து, அவர்களை ஆசீர்வதித்து ஓர் உடன்படிக்கையினை செய்தார். (ஆதி 4:11) இதுவே நோவாவுடன் பெருவெள்ளத்தின் பின் இறைவன் செய்த உடன்படிக்கையாகும். இதனடையாளமாக வானவில்லை வைக்கின்றார். இவ்வில் வானில் தோன்றும் போதெல்லாம் தான் செய்த உடன்படிக்கையை நினைவு கூருவதாய் உறுதியளிக்கின்றார். இச் செயற்பாட்டின்மூலம் இறைவனின் அளவுகடந்த இரக்கத்தினை ஆசிரியர் விளக்கிக் காட்டுவதைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் ஒலிபரப்பில் நாற்பது ஆண்டுகள் கண்ட வத்திக்கான் வானொலி

வத்திக்கான் வானொலியின் இந்திய-தெற்கு ஆசியப் பிரிவு, தெற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்குப்பகுதிக்கென தனது சேவையைத் தொடங்கி இவ்வாண்டு (2005) மே மாதம் நாற்பது ஆண்டுகள் நிறைந்தன.

வாரத்திற்கு இரண்டு முறை என்று ஆங்கில மொழி ஒலிபரப்புத் தொடங்கி, பின்னர் நான்கு மொழிகளில் தினசரி ஒலிபரப்பு என்ற நிலைக்கு வளர்ந்து, தற்பொழுது சிற்றலை மற்றும் பன்பலைத் தொடர்பு வழியாக தினமும் மூன்று தடவைகளில் நான்கு மணி நேர ஒலிபரப்பை நடத்தி வருகின்றது. மேலும் ஒரு மொழி, வாரத்திற்கு நான்கு முறை என ஒரு மணி நேர ஒலிபரப்பை நடத்தி வருகின்றது.

வத்திக்கான் வானொலி மதங்கள் மத்தியில் புரிந்து கொள்ளுதலை ஊக்குவிக்கிறது. உலகளாவிய மனித நன்னெறி மதிப்பீடுகளைப் பேணி வளர்க்கிறது.

## திருதந்தையின் வானொலி

வத்திக்கான் வானொலி ஒரு கத்தோலிக்க வனொலிச் சேவை. இது திருத்தந்தையின் வானொலி. இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வும் போதனைகளுமே இதன் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படை. சர்வதேச சமுதாயத்தால் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இவ்வானொலி, திருத்தந்தையின் திருப்பணிக்கு உதவும் வகையில் ஒரு தொடர்பு சாதனமாகவும் நற்செய்தி பரப்பு ஊடகமாகவும் விளங்குகின்றது. கிறீஸ்தவச் செய்தியைச் சுதந்திரமாகவும் பற்றுறுதியுடனும் திறம்படவும் அறிவித்து, கத்தோலிக்கத்தின் மையத்தை உலகின் பிறபகுதிகளோடு தொடர்பு கொள்ளச் செய்வதே இதன் முக்கியப்பணியாகும்.

வத்திக்கான் வானொலி, திருச்சபை மற்றும் மதம் சார்ந்த செய்திகளை வழங்குகின்றது. இத்தகைய செய்திகளைப் பிற தொடர்பு ஊடகங் களில் கேட்க முடியாது. முதலில் இவ்வானொலி, திருத்தந்தையும் திருப்பீடமும் நடத்தும் நிகழ்ச்சிகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் அறிவிக்கின்றது. சமயச் சூழலில் அரசியல், பொருளாதார விவகாரங்களைத் தருவதோடு, மக்கள் காலத்தின் அறிகுறிகளைப் பார்த்து, அவர்கள் விசுவாச ஒளியில் செயல்படுவதற்கு ஊக்குவிக்கின்றது.

சமயச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது போதிய வசதிகளற்ற இடங்களில் வாழ்வோர் தம் ஆன்மீக தாகத்தை தணித்துக் கொள்ளவும் வழிபாடுகளில் கலந்து கொள்ளவும் உதவியாக திருவழிபாட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது. சிறப்பாக, திருத்தந்தையுடன் திருச்சபையின் ஒன்றிப்பை ஆழப்படுத்துவதற்கென அவர் தலைமையேற்று நடத்தும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.

வத்திக்கான் வானொலியின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் கிறீஸ்தவ வாழ்வின் பல்வேறு கூறுகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தாலும், மத நல்லிணக்கத்துடனும் ஒத்துழைப்புடனும் மனித சமுதாயம் வாழ உதவியாக கிறீஸ்தவ ஒன்றிப்பு மற்றும் பல்சமய உரையாடலில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், திருச்சபையின் நீண்ட காலப் பாரம்பரியத்திற்கு ஒத்திணங்கும் வகையில் கலாசாரம், கலை, சிறப்பாக இசை போன்றவைகளிலும் போதுமான கவனம் செலுத்தப்படுகின்றது.

இயேசுவின் நற்செய்தியும் மானிட நட்பும் ஒன்றாகக் கலந்ததன் விளைவே வத்திக்கான் வானொலி. திருத்தந்தை 11ம் பத்திநாதர் பணியேற்றதும் தமது செய்தி பாரெங்கும் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் வானொலி ஒன்றை வடிவமைக்குமாறு தமது நணபர் மார்க்கோணியைக் கேட்டார். அப்போதுதான் வானாலியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடித்திருந்த மார்க்கோணி திருத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் பணியில் இறங்கினார். 1931ம் ஆண்டு பெப்ருவரி 12ம் திகதி திருத்தந்தை முன் முழந்தாளிட்டு அவர் கரங்களை முத்தி செய்த பின்னர் ஒலிவாங்கியைப் பிடித்தார் மார்க்கோணி.

"இயற்கையின் புதிரான சக்திகளை மனிதன் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும் எல்லாம் வல்ல இறைவனின் பெருந்துணையுடன் ஒரு கருவியைக் கண்டுபிடிக்க முடிந்தது. திருத் தந்தையின் குரல் உலகெங்கும் கேட்க வழி செய்தது". - என்று பேசினார். பின்னர் திருத்தந்தையின் பக்கம் திரும்பி "திருத்தந்தையே தாங்கள் என்னிடம் ஒப்படைத்த பணியை இன்று உம்மிடமே திருப்பியளிக்கின்றேன். தங்களது செய்தியை உலக மக்கள் எல்லோரும் கேட்கச் செய்யுங்கள்" என்றார்.

திருத்தந்தையும் நற்செய்தியின் உலக ளாவிய தன்மையை வலியுறுத்தும் தம் முதல் வானொலிச் செய்தியை இலத்தீன் மொழியில் தம் கைப்பட எழுதி வாசித்தார்.

"வானங்களே! கேளுங்கள். பூவுலகே! பூமியின் கடைக்கோடியில் வாழ்பவர்களே! என் வாயிலிருந்து வருவதை உற்றுக் கேளுங்கள்" என்றார். அந்நாளிலிருந்து வத்திக்கான் வானொலி தூயபேதுருவின் வழித்தோன்றலின் குரலை ஊருக்கும் உலகிற்கும் ஒலிபரப்பி வருகிறது. எனவே, திருத்தந்தையின் வானொலி உலகப் பாரம்பரியச் சொத்துக்களில் விலைமதிப்பற்ற ஒன்று. இது தனது ஒலிபரப்பு வரலாற்றில் மைல் கல்லையும் பதித்துள்ளது. வாழ்க வத்திக்கான் வானொலி!

***வத்திக்கான் வானொலி***
***தேசிய அலுவலகம்***
***சென்னை***


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
28
-
09
-
1943



இறப்பு
04
-
07
-
2004

**ஆனந்தகுமார் முத்துக்குமார்**

*அன்பின் உறைவிடமாய்*
*பாசத்தின் பிறப்பிடமாய் - எம்*
*அன்புச் சகோதரனாய் வாழ்ந்தவரே*
*நீர் எம்மைவிட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும்*
*உம் நினைவு எம்மை விட்டு ஒருபோதும் நீங்காது*

**தகவல்**
**சகோதர சகோதரிகள்,**
**மைத்துணிகள்**

**இல.03, விக்டோரியா வீதி,**
**மட்டக்களப்பு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"இதுதான் பைபிள்" என்னும் தலைப்பிலான புத்தகமொன்றை பி.ஜெயினுல் ஆப்தீன் என்பவர் எழுதியுள்ளார். இப்புத்தகம் 1994ல் வெளியிடப் பட்டுள்ளது. மதுரையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அப்புத்தகத்தின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

அன்புக் கிறிஸ்தவ நண்பர்களே! புத்தகத் தின் தலைப்பு உங்களில் சிலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடும். உங்களை ஆச்சரியப்படுத்துவதோ, புண்படுத்துவதோ என் நோக்கம் அன்று.

பல விசயங்களில் உங்களுக்கும் முஸ்லிம் களாகிய எங்களுக்கும் இடையில் நல்லிணக்கமும் ஒத்தகருத்தும் இருக்கின்ற உரிமையில் உண்மையை உங்களுக்கு உரைக்க வேண்டும் என்பதனைத் தவிர வேறு நோக்கம் எதுவும் எனக்கில்லை...

...உங்களது வேதம், உங்களின் நம்பிக்கை, பரலோக ராஜ்ஜியத்தில் நித்திய ஜீவனை அடைய உதவுவதாக இல்லை. உங்கள் மதகுருமார்கள் உங்களைத் தவறான வழியில் இழுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்.... பைபிள் கர்த்தரின் வார்த்தைகளாக இருக்கவே முடியாது; மனிதரின் வார்த்தைகள் கலந்துள்ளன; கர்த்தரின் வார்த்தைகள் பல நீக்கப்பட்டுள்ளன...

என்றவாறு முன்னுரை நீண்டுகொண்டு செல்லுகின்றது.

இதைத் தவிர உள்ளடக்கங்கள் கூட பைபிளை மாசுபடுத்துவதாகக் காணப்படுகின்றன.

எனவே,இது தொடர்பாக விளக்கங்களைப் பெறும் பொருட்டு தேற்றாத்தீவு புனித. யூதாததேயு ஆலய உதவிப் பங்குத்தந்தை, அருட்பணி.மதுராங்கன் குரூஸ் அவர்களை "தொண்டனின் சில நிமிடங்களுக் காக" செவ்வி கண்டோம்.

:- அருட்தந்தை அவர்களே இந்த நூலைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

:- பைபிளில் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே நூலாசிரியர் இப்புத்தகத்தை எழுதியுள்ளார். இஸ்லாம் மட்டுமே உண்மையானது என எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளார். இவ்வாசிரியர் ஆன்மீகவாதியாக தொழிற் படாமல் மதவாதியாக மட்டுமே தொழிற்படுகின்றார். ஜேர்மன் இனத்தவரே உயர்ந்த இனம் என ஹிட்லர் காட்டமுற்பட்டது போன்று இதுவும் அமைந்துள்ளது

.

:- பைபிள் இறைவனால் அருளப்பட்டிருந்தால் மூலமொழியிலான நூல் எங்கே என்றவாறான கேள்வியொன்று இப்புத்தகத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

:- வேதாகமம் என்பது பல நூல்களின் தொகுப்பு. வெவ்வேறு நூல்கள் வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. இஸ்ராயேல் மக்களுக்காக தோரா (பஞ்சாகமம்) எபிரேய (ஹீப்ரு) மொழியில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. எனவே வேதாகமத்திற்கு ஒரேயொரு மூலமொழியிருக்கவில்லை. அத்துடன் மூல நூல்களில் சில இன்னும் உள்ளன. சில அழிவுற்றுள்ளன எனலாம்.

:- வேதாகமங்களில் புத்தகங்களின் எண்ணிக்கை, வசனங்களின் எண்ணிக்கைகள் கூடிக் குறைகின்றனவே என ஒரு வினா எழுப்பப் பட்டுள்ளதே?

:- கத்தோலிக்க திருச்சபையில் வேதாகம புத்தக எண்ணிக்கைக்கும் ஏனைய சபைகளின் புத்தக எண்ணிக்கைக்கும் வித்தியாசம் உண்டு. அது ஒவ்வொரு பிரிவினரின் ஏற்றுக்கொள்ளும் தன்மையைப் பொறுத்தது. 4370 வசனங்கள் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபையின் ஏழு ஆகமங்கள் புரட்டஸ்தாந்துகளின் பைபிளில் இல்லை.

:- விலக்கப்பட்ட கனியை உண்ணுமாறு ஏவாளைத் தூண்டிய பாம்புக்கு கடவுள் சாபம் கொடுத்ததாகவும் அச்சாபத்தின்படி பாம்பானது வயிற்றினாலேயே நகரவேண்டியிருந்தது என்றும் விவிலியம் கூறுகின்றது. அப்படியானால் பாம்புக்கு ஏற்கெனவே கால் இருந்ததா என வினாவொன்று எழுப்பப்பட்டுள்ளதே?

:- தொடக்கநூலின் முதல் பதினொரு அதிகாரங்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி. ஆபிரகாம் தொடக்கம் தான் உண்மையான விவிலியப்பகுதி ஆரம்பமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➾ :- ஆதியாகமம் 38:27-30 ல் "அவளுக்குப் பிரசவ காலம் வந்தபோது அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தன. அவள் பிரசவிக்கும்போது ஒரு பிள்ளை கையை வெளியே நீட்டியது ...." இப்பகுதியைக் குறிப்பிட்டு பிரசவத்தின்போது தலைவெளிப்படாவிட்டால் அது எப்படி சுகப் பிரசவம் ஆகமுடியும் என்றவாறும் இது தொடர்பான இன்னும் வினாக்களும் காணப்படுகின்றனவே...!

:- அக்காலத்திலும் அறிவியல் முன்னேறித்தான் இருந்தது. அனுபவப்பட்ட மருத்துவப் பெண்கள் இருந்துள்ளார்கள். எனவே இவ்வாறு சுகப்பிரசவம் ஏற்படுவது சாத்தியந்தான்.

➾ :- இயேசு இறந்தபின் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவரின் விலாவிலே குத்தினான் உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. (யோவான் 19: 33, 34) இறந்தபின் எப்படி இரத்தமும் தண்ணீரும் வெளிப்படும் என வினாவொன்று உள்ளதே?

:- இரத்தம் உறைவது வழக்கம்தான். எனினும் இதயத்தினுள் சிறிதளவு இரத்தம் சற்றுக்கூடிய நேரம் உறையாமல் இருக்கும் என்பது நம்பிக்கை.

➾ :- இயேசுவின் வம்சாவழிப் பட்டியலில் விபச்சாரிகளும் காணப்படுகின்றனர். இவ்வம்சா வழிப் பட்டியலை வெளியிட்டதன் மூலம் மத்தேயுவும், லூக்காவும் இயேசுவை இழிவுபடுத்தியுள்ளனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளதே?

:- உண்மையில் இயேசுவின் வம்சாவழிப் பட்டியலில் விபச்சாரிகளும் உள்ளனர்தான். யோசேப்பு வரை பட்டியல் நீள்கின்றது. ஆனால் இயேசு யோசேப்புவுக்கு பிறக்க வில்லையே. யோசேப்புடன் வம்சாவழி முடிவடைகின்றது. மரியாள் பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பமானாள். எனவே இயேசு இழிவுபடுத்தப்படவில்லை.

➾ :- வேதாகமம் பரிசுத்த ஆவியால் எழுதப்பட்டது என்றால் ஏன் வேறுபாடு காணப்படுகின்றது? என்றொரு வினாவுண்டே...?

:- சமூகத்திற்குக் கொடுக்கப்பட்ட செய்தியொன்றுதான். ஆனால் எழுதப்பட்ட விதம் வேறு. எனவே, நற்செய்தியாளரின் நற்செய்திகளுக்கிடையே வேறுபாடுகள் உண்டு.

இறுதியில் நேரம் ஒதுக்கித்தந்து, இப்பேட்டிக்கு ஒத்துழைப்பு தந்தமைக்கு 'தொண்டன்' சார்பில் நன்றி கூறி விடைபெற்றோம். பேட்டிக்கு இடையில் மன்னிப்பு கேட்டுவிட்டு அருட்பணி போல் ரொபின்சன் அடிகளாருடன் சேர்ந்து, திருப்பலியொன்றும் ஒப்புக்கொடுத்துவிட்டார்.

**-ஆழியோன்-**

## சிறப்பு பொதுநிலை நற்கருணைப் பணியாளராகப் பன்னிருவர் நியமனம்

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் சிறப்பு பொது நிலை நற்கருணைப் பணியாளராக பன்னிருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 21ம் நாள் மட்டக்களப்பு தாண்டவன்வெளி புனித வியாகுல அன்னை ஆலயத்தில் நடைபெற்ற நற்கருணைப் பணியாளர் பணி ஏற்புத் திருச்சடங்கை மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் நிறைவேற்றி வைத்தார்

தாண்டவன்வெளியிலிருந்து ஒன்பது பேரும் இருதயபுரத்திலிருந்து இருவரும், சகாயபுரத்திலிருந்து ஒருவருமாக பன்னிருவர் பங்குத்தந்தையரால் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களது சமய ஈடுபாடு, பணிச்சிறப்பு போன்றவைகளைக் கருத்திற்கொண்டு இத்தெரிவு இடம் பெற்றது. இத்திருச்சடங்கின்போது திருவுரை வழங்கிய ஆயர் அவர்கள் 'இரண்டாம் வத்திக்கான் சங்கம் வழங்கிய பரிந்துரைகளுக்கமைய பொதுநிலையினரும் திருப்பணிகளில் தமது நிலைகேற்றபடி பங்கு கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். காலங்கடந்தாயினும் தேவை கருதி நற்கருணைப் பணியாளர்களாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டு தகுந்த பயிற்சியின் பின் நியமிக்கப்படுகின்றனர் நற்கருணையைப் பகிர்வதிலும் பிற பணிகளிலும் பங்கத்தந்தையின் ஆலோசனையுடனும், அனுமதியுடனும் இவர்கள் ஈடுபடுவர்', என்று குறிப்பிட்டார். மேலும் அவர், இவர்கள் சாதாரண மக்களிலிருந்து வேறுபட்டவர்களோ, உயர்ந்தவர்களோ அல்ல, மக்கள் மத்தியில் அவர்களுள் ஒருவராக வாழ்ந்து நற்கருணையில் பக்தி விசுவாசத்துடன் முன் மாதிரியாக வாழவேண்டும் என்று தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகம் பூராகவும் வாழும் 120 கோடிக்கும் அதிகமான கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவராக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணி ஆற்றிய திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் அவர்களின் மறைவு உண்மையிலேயே ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு என்றால் மிகையாகாது.

தனியே கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாது ஏனைய அனைத்துத் தலைவர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டு போற்றப்பட்டவரும், அனைவரது விருப்பத்திற்குரியவராகவும், அனைவரையும் நேசித்தவராகவும் விளங்கிய திருத்தந்தையின் பணிவாழ்வு குறிப்பாக மனிதநேயம் மிக்கவர்களுக்கும், உலக அமைதிக்காக பாடுபட்டு உழைத்தவர்களுக்கும் திருத் தந்தையின் பணிவாழ்வு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியது.

அவரின் இறுதிக்காலக் குறிப்புக்கள் "அனைவரும் மகிழ்ந்திருங்கள். என் பிரிவிற்காக கண்ணீர் சிந்த வேண்டாம்" என்றும் "எல்லாம் இறைவன் சித்தம்" என்றும் அமைந்திருந்தன. அவர் இறை சித்தப்படி பணி செய்து வாழும்போது இறவாத பெரும்புகழோடு வாழ்ந்தார். இறுதியில் இறைவனடி சேர்ந்தார் என மகிழ்ச்சி கொள்வோம்.

# திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்

## வரலாற்றுக் குறிப்புக்கள்

பிறப்பு: 08. மே. 1920 போலந்து நாட்டில் வாடோவைஸ் என்னும் ஊரில் பிறந்தார்.

இயற்பெயர்: கறோல் வெயிற்றிலா *(Coro/Wojtula)*

தந்தை: கறோல் *(Carol)*

தாய்: எமிலியா

சகோதரர்: எட்மண்ட், இவர்கள் குழந்தைப் பருவத்தில் அன்புத் தாயை இழந்தார்கள்.
ஒரே ஒரு மூத்த சகோதரனும் வைத்தியராக இருந்து இவருக்கு 12 வயது நடக்கும்போது மரணமானார். இவரின் 19ம் வயதில் (1939ல்) 2ம் உலக மகா யுத்தம் ஆரம்பம். அவ்வேளை தந்தை ஒரு போர்வீரனாக போலந்து நாட்டில் ஹிட்லரின் ஆட்சியில் சிறைபிடிக்கப்பட்டு அநேக சித்திரவதைகளின் பின் 1941இல் கடும் நோய் வாய்ப்பட்டு நாட்டிற்காக இறந்தார்.

1942ல் 22வது வயதில் குருத்துவக் கல்வி ஆரம்பம்

01.11.1946ல் 26வது வயதில் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். 13.01.1964இல் கராக்கு மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார்.

26.06.1967இல் கருதினாலாகப் பணி உயர்வு பெற்றார். கிரகோஸ் நகரின் பேராயர் ஆகவும் பணி புரிந்தார்.

16.10.1978ல் 58வது வயதில் திரு அவையின் 264வது திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார். 22.10.1978ல் பணிப் பொறுப்பை ஏற்றார். அப்போது பாரம்பரிய பெயரை 2ம் அருளப்பர் சின்னப்பர் எனவும் தேர்வு செய்து தனக்கு சூடிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது 58இல் போலந்து நாட்டவர் ஒருவர் முதல் முறையாக திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். திருதந்தை ஆனவுடன் மக்கள் முன்தோன்றி "என்னை முழுமையாக உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன்" என்று கூறியதோடு "நான் முழுவதும் உங்களுக்காகவே!" எனும் விருது வாக்கியத்திற்கு ஏற்ப வாழ்ந்தும் காட்டினார். இவரை பயணம் செய்யும் "திருத்தந்தை என்றே பலரும் அழைப்பர். "செல்லுங்கள் உலகமெல்லாம் சொல்லுங்கள் நற்செய்தி" என்ற எமது ஆண்டவர் கிறீஸ்து இயேசுவின் பொன்மொழிக்கிணங்க மக்களுக்காவே உரோமில் தங்கியிருப்பதைவிட மக்களையே நாடி தேடிச் செல்லவேண்டும் என்பதே இவரின் விருப்பமும் செயல்திட்டமும் ஆகும்.

தான் பயணம் செய்யும் நாடுகளில் முதன் முதலில் அந்த நாட்டின் மண்ணை முத்தமிட்டு அந்நாட்டை பெருமைப்படுத்துவதோடு உலகில் ஏழை, பணக்காரன் என்ற பேதமை மறைய மறை உரையும் ஆற்றுவார்.

இவ்வகையில் எம் தாயகத்திருநாடான இலங்கைப் பயணத்தின்போது இலங்கையின் 9 மாகாணங்களில் இருந்தும் பெறப்பட்ட மண் மாதிரிகையை முத்தமிட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் யூன் நடுப்பகுதியில் சுவிஸ் நாட்டிற்கு வருகை தந்தபோது, சுவிஸ் நாட்டின் 4 திசைகளிலும் ஓடும் ஆறுகளின் தண்ணீர் தருவிக்கப்பட்டு, அதனைத் தம் திருக்கரத்தால் ஆசீர்வதித்து அதனை வருகை தந்த மக்கள் மீது தெளிக்க செய்தமை நினைவு கூரக் கூடியதொன்றாகும்.

13. மே 1981 புதன் காலை வேளை புனித இராயப்பர் சதுக்கத்தில் திருப்பலியின் பின் மக்களைத் தரிசிக்க வந்தவேளை "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்" என்ற எம் ஆண்டவர் இயேசுவின் வாக்கிற்கு ஏற்ப அரியானா நாட்டு சிறுமி சாறா பாற்றோலினாவைத் தூக்கி ஆரத் தழுவி முத்தமிட்ட சில விநாடிகளில் துருக்கிய தீவிரவாதி முகமட் அலி அகா என்பவனால் துப்பாக்கியால் சுடப்பட்டார். இதில் திருத்தந்தையுடன் மூவர் காயமடைந்தனர். இதனால் வைத்தியசாலையில் 2 தீவிர சத்திர சிகிச்சைகளும் இறுதி நோயில்பூசுதல் திருவருட் சாதனமும் பெற்றும் 100 நாட்களின் பின் வைத்தியசாலையில் கழித்தபின் 27.12.1983இல் உரோம் நகர சிறையில் தன்னை சுட்டுக் காயப்படுத்தியவரைச் சந்தித்து "நீ என் சகோதரன்" என துருக்கி மொழியில் கூறி மன்னிப்பு வழங்கினார். மன்னிப்பின் பின் விடுதலையாகி மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபட்டமையால் தற்போதும் சிறைவாசம் அனுபவிக்கின்றான். இதனால் எம் எல்லோருக்கும் முன் மாதிரிகையாக மன்னிப்பின் நாயகனாக விளங்கினார். இவரில் பாய்ந்த குண்டு இன்றும் போர்த்துக்கல் நாட்டில் பாத்திமா அன்னையின் முடியில் இருப்பதைக் காணலாம்.

1977ம் ஆண்டளவில் "மனித உழைப்பு" சமூக அக்கறை" "நூறாவது ஆண்டு" "இரட்சகரின் தூதுப்பணி என பல சுற்று மடல்களை வெளியிட்டார்.

20.01.1995இல் இலங்கை வந்து எம் மண்ணில் மறைபணி ஆற்றிய இந்திய கோவாவைச் சேர்ந்த பிராமணகுல வணபிதா யோசவ்வாஸ் அடிகளாருக்கு முத்திப் பேறு பெற்றவர் எனும் முதல் நிலைப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததோடு எம் தாயக மண்ணும் பெருமை பெற்றது எனலாம்.

19.10.2003 உலக மறைபரப்பு ஞாயிறு தினம் அன்று ஏழைகளின், கைவிடப்பட்டோரின் கருணை வடிவமாக வாழ்ந்து மறைந்த கல்கத்தா அன்னை தெரேசாவுக்கு 500,000க்கு மேல் கூடியிருந்த இறைமக்கள் மத்தியில் "கிறீஸ்தவ வாழ்வின் சாட்சி இவரே" என புகழ்மாலை சூட்டி 21ம்நூற்றாண்டின் புனித வணக்கத்திற்குரியவர் என்று அறிவித்தார். இவர் 2002 ஐப்பசி முதல் 2003 ஐப்பசி வரை உள்ள ஒரு வருட காலப்பகுதியை திருச்செபமாலை ஆண்டாக பிரகடனப்படுத்தியதோடு திருச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபமாலையின் மகிமையை அதிகரிக்க கத்தோலிக்க பாரம்பரிய பக்தி முயற்சியான திருச்செபமாலையில் 5 புதியதான ஒளியின் மறைநிகழ்சிகளையும் சேர்த்துக்கொண்டதால் திருச்செபமாலையில் புதிய மாற்றம் ஏற்படுத்திய திருத்தந்தையும் ஆவார். இதனால்தான் என்னமோ அன்னையின் அருட்கடாட்சத்தால் இவரின் இறுதிநாட்களில் பலர் புனித இராயப்பர் சதுக்கத்தில் இவருக்காக திருச்செபமாலை ஓதியவாறு இறைவேண்டலில் ஈடுபட்டமையைக் காணக் கூடியதாக இருந்தது. இவர் அன்னை மரியாள் மீது அதீத நம்பிக்கை வைத்த மரியாள் பக்தன் என்றால் கூட மிகையாகாது.

மேலும் இறைவனின் நல்ல கருணை யாம் நற்கருணைப் பக்தியை மேம்படுத்தும் முகமாக 2004, 2005ம் ஆண்டை நற்கருணை ஆண்டாகவும் பிரகடனப்படுத்தியமை குறிப்பிடக் கூடிய ஒன்றாகும்.

கடந்த 27 ஆண்டுகளாக உலகின் எத்தனையோ சவால்கள் எதிர்ப்புக்கள் மத்தியில் (குறிப்பாக கருத்தடை, ஓரினச்சேர்க்கை பெண்கள் குருத்துவம்) நம் தாய்த் திருச் சபையை வழுவா வரத்துடன் கட்டிக் காத்து வழிநடத்திய பெருமையுடன் 02.04.2005 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அவரது ஆன்ம சாந்திக்காகவும், அவர் பெரிதும் விரும்பிய மன்னிப்பு, உலக சமாதானம் நிலை பெறவும் எம் செப வேளைகளில் இறைவனிடம் வேண்டுவோம்.

***தொகுப்பு: திருமதி. அன்ரன் ஜெயந்தினி***
***ORBE, Switzerland***

12ம் பக்க தொடர்ச்சி

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் ஒரு காரணமாக இருப்பினும் இதனால் அதிக இலாபம் வடக்கு கிழக்கு மக்களை விட ஜனாதிபதிக்குத்தான்.

பேச்சுவார்த்தையைக் குழப்பி அடித்ததின் மூலம் சர்வதேச சமூகத்தில் ஏற்பட்ட அவப்பெயரை ஓரளவு நீக்கிக் கொள்வதோடு வெளிநாட்டு உதவி களும் தாராளமாக வந்தடையப் போகின்றன.

ஆட்சியில் பங்காளியாக இருந்து கொண்டே அடிக்கடி முறுக்கிக்கொண்டிருந்த ஜே.வி.பி. யை வெளியேறவைத்த ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பலம் குறைந்தாலும் எதிர்க் கட்சிகள் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

ஜனாபதியின் பதவிக் காலம் 2006 டிசம்பர் வரை என்று அரசாங்கம் கூறிக்கொண்டிருக்க, 2005 ம் ஆண்டு டிசம்பர் வரையுமே பதவிக்காலம், அதன்பின் பதவி விலகாவிடில் போராட்டம் என்று கூறி வந்த ஐ.தே.கட்சி தற்போதைக்கு போராட்டம் எதனையும் முன்னெடுக்க முடியாது. சுனாமிக் கட்டமைப்பின் நடைமுறைக்கு ஜனாதிபதியின் இருப்பு அவசியம். இதனைக் குழப்பியடிப்பதால் சிறுபான்மை மக்களிடமும், சர்வதேச சமூகத் திடமும் ஐ.தே.க. அவப்பெயரை எடுக்க நேரிடும். ஆகவே இன்னும் ஓராண்டுக்கு ஜனாதிபதிக்கு பதவிப் பிரச்சினையும் இல்லை. அதுமட்டுமல்ல சுனாமிக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஜனாதிபதிக்கு சிறுபான்மை மக்களிடையே ஏற்படும் ஆதரவும் அனுதாபமும் எதிர்காலத்தில் ஜனாதிபதி எடுக்கவிருக்கும் பதவி நீடிப்புக்கான யாப்பு மாற்றம் போன்ற அரசியல் நடவடிக்கை களுக்கு ஓரளவு பலம் சேர்ப்பதாக அமையலாம். ஆக சுனாமி நிவாரணக் கட்டமைப்பால் ஜனாதிபதிக்குக் கிடைக்கும் அறுவடை அதிகம் தான். இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் நியாயமான அரசியல் விருப்புக்களைத் தீர்த்து வைக்க ஜனாதிபதி முன் வந்தால் மட்டுமே இந்நாடு நிரந்தர சமாதானத்தையும், அபிவிருத்தி யையும் அடைய முடியும்.

-மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
30 - 07 - 2005




# விவிலியம் கற்போம் - 40

**(விடுதலைப் பயணம் 15: 19–27)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

பார்வோனின் குதிரைகள், தேர்கள், குதிரை வீரர் அனைவரும் கடலில் சென்று கொண்டிருக்க, ஆண்டவர் அவர்கள் மேல் ........................ திருப்பிவிட்டார். இஸ்ரயேல் மக்களோ கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். இறைவாக்கினளும், ஆரோனின் தங்கையுமான ........................ கஞ்சிரா ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டாள். பெண்டிர் அனைவரும் அவள் பின் சென்றனர். அப்போது அவள் ........................ புகழ்பாடுங்கள்: ஏனெனில் , அவர் மாட்சியுடன் வெற்றி பெற்றார் என்று பாடினாள். பின்பு மோசே இஸ்ரயேலரை செங்கடலிலிருந்து புறப்பட்டுப் போகச் செய்தார். அவர்கள் மூன்று நாட்கள் ........................ பயணம் செய்தனர். அங்கு தண்ணீர் எதுவுமே தென்படவில்லை. பின்னர் அவர்கள் ............................ சென்றடைந்தனர். அங்கிருந்த தண்ணீரைப் பருக அவர்களால் இயலவில்லை. அது கசப்பாக இருந்தது. நாங்கள் எதைத்தான் .......................... என்று கூறி முறுமுறுத்தனர். ............................. ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்பினார். ஆண்டவர் அவருக்கு ஒரு மரத்துண்டைக் காட்டினார். அதை அவர் தண்ணீரில் எறிய ..................... சுவை பெற்றது. மேலும் ஆண்டவர் "உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்கு நீ ............................ உடன் செவிசாய்த்து, அவர் பார்வையில் நலமாகத் தோன்றுவதைச் செய்து, அவர் கட்டளைகளைப் பின்பற்றி, அவர் சட்டங்கள் அனைத்தையும் கைக்கொண்டால், நான் எகிப்துக்கு வரச் செய்த .............................. நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன்" என்றார். அவர்கள் ஏலிம் சென்று தண்ணீருக்கருகில் பாளையம் இறங்கினர்.

**விடைகள்: ஆண்டவருக்கு, மாராவை, அக்கறை, தண்ணீரும், மிரியாம், மோசே, கொள்ளை, கடல்நீர்த்திரளை, குடிப்போம், சூர் பாலைநிலத்தில்.**

*(இவ்வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 40

(சரியான விடையின் கீழ் அடிக்கோடிடுக)

1. சுனாமிக்குப் பின் இலங்கைக்கு வந்து சென்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஒருவர்
   (சொல்ஹெய்ம், பில் கிளின்டன், W. புஷ்)

2. உலகின் தலைசிறந்த நூறு திரைப்படங்களுள் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் தமிழ்த் திரைப்படம்
   (சந்திரமுகி, கில்லி, நாயகன்)

3. வனொலியைக் கண்டுபிடித்த மார்க்கோணி உருவாக்கிய வானொலி நிலையம்
   (லண்டன் B.B.C, வொயிஸ் ஒவ் அமெரிக்கா, வத்திக்கான் வானொலி)

4. கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்.........
   (நிற்க நிமிர்ந்து வாழ்வில், நிற்க அதற்குத் தக, நிற்க நிகரிலை உனக்கு)

5. உடலில் தைமஸ் சுரப்பி உள்ள இடம்
   (மார்பு, வயிறு, கழுத்து)

6. கிரிக்கெட் விளையாட்டின் தாயகம்
   (அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், பிரித்தானியா)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 40
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 38 விடைகள்

மிக்கேல், பிக்கிரோத்து, பாலைநிலம், பார்வோனின்,
வென்று, அலுவலர், ஊழியம், தேரை, இஸ்ரயேல், எகிப்தியர்.

## அறிவை வளர்ப்போம் - 38 விடைகள்

1) அமேசன் காடு
2) பல்லவர் 3) வியாசர்
4) இந்திராகாந்தி
5) புல்லைத் தின்னாது
6) கண்ணுச்சாமி

**இருபிரிவுகளுக்கும் சரியான விடை அளித்து இசை நாடா பரிசு பெறுகிறார்.**

- ஆக்காஷ் ஞானரெட்ணம்,
52 A, பழைய கல்முனை வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

- P.G.N.கொரோா
புனித வளனார் சிறிய குருமடம்
விமான நிலைய வீதி,
மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து 50/= பரிசு பெறுவோர்!**

- J.P.ஜெனோ லக்ஷன்
11/7, ஏரன்ஸ் வீதி,
தாண்டவன்வெளி
மட்டக்களப்பு.

- T.R.மயூரன்
விமான நிலைய வீதி,
திருப்பெருந்துறை
மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறுவோர்**

- அ. கிங்ஸ்லி
இல. 05, அரசாங்க விடுதி ஒழுங்கை
கல்லடி,
மட்டக்களப்பு.

- ப. ஜெகதாஸ்
6/134, சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*




# இலங்கை வானொலி
# தேசிய சேவையில்
# கத்தோலிக்க
# நிகழ்ச்சிகள் – தமிழ்
# ஜூலை – 2005

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – நேரம் காலை 5.50 மணி.**

நாள்: 09, 10, 11, 12 - ஜெயரஞ்சி வாஸ்
13, 14, 15 - D. பென்ஜமின்
23, 24, 25, 26 - அருள்தந்தை இன்னாசி ஜோசப்
27, 28, 29 - அருள்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ்

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) – நேரம் மாலை 06.30 மணி**

நாள்: 05 - புனிதர்களை அறிவோம், வினா விடைப்போட்டி
- பாரதிப்பிரியா
19 - குறுங்கதை, கவிதை, பாடல்கள்

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) – நேரம் மாலை 6.30 மணி**

நாள்: 03, 17, 31. - (உரை, செய்திகள், போட்டி, நாடகம், அறிவிப்புக்கள், பாடல்கள், கொண்ட சஞ்சிகை மலர்)

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

*Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org